Regd : No. 5277. UDUMALAI BEERANGI டெலிபோன் 2597

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

# உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

8 பக்கங்கள் வாரப்பதிப்பு விலை ஒரு அணா.

வெடி 1. சென்னை, சனிக்கிழமை (20-11-1948) குண்டு 7

# கடவுளும் காதலும் வாழ்க்கை ஒளியும்

## கடவுள்-பக்தி அன்பு-காதல்

எல்லா மதங்களிலும், மதநூல்களிலும், திருவாசகங்களிலும் திருமொழிகளிலும், அறநூல்களிலும், வேதாகமங்களிலும் இந்த நான்கும் தொடர்பு கொண்டுவருவதைக் காணலாம்.

கடவுளும் பக்தியும், கடவுளும் அன்பும், கடவுளும் காதலும் என இணை கூடி வருவதையும் காண்கிறோம்.

கடவுளுக்கும், பக்தி, அன்பு, காதல் என்ற மூன்றிற்கும் என்ன சம்பந்தம்? மூன்றும் வெவ்வேறு பண்புகளாக—வெவ்வேறு குறிக்கோள்களை—இலக்குகளைக் கொண்டவையாக இருக்கின்றனவே.

பொதுப்படைப்பொருளின்படி இம் மூன்றுபண்புக்களும் அன்பு என்பதனையே சுட்டுவதாகின்றன. கடவுள்பால் காட்டும் அன்பு பக்தி, மற்றவுயிரினங்கள்பால் காட்டுவது அன்பு, அல்லது பாசம். ஆண்பெண்ணிடமும் பெண் ஆணிடமும் காட்டுவது காதல். இது சமய சந்தர்ப்ப நுண்பொருள்.

அற நூல்களை இன்னும் நுணுகிப் பார்க்குமிடத்து, இந்த மூன்று பண்புகளை கடவுள் என்றும் காணக்கிடக்கிறது. எனவேதான் எல்லா அறநூல்களிலும் "அன்பே கடவுள்" என மணிச்சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த "அன்பே கடவுள்" என்ற மெய்மொழி, பிற்காலத்தில், யாராலோ, மதநலத்தாலோ அல்லது சுயநலத்தாலோ அல்லது சமயசந்தர்ப்ப விபரீதங்களினாலோ, உதாசீனம் செய்யப்பட்டு வந்திருக்கிறது.

## பகுத்தறிவின் முன் பதறி ஓடுகிறது குருட்டு வைதீகம் !




வைதீகர்:— ஐயையோ பூச்சாண்டி ! பூச்சாண்டி !!

எல்லா மதங்களிலும் கடவுளும் பக்தியும் தான் வலிந்து வலிந்து பிணைக்கப் பட்டிருக்கின்றன. மற்ற இரண்டும், கடவுளிடமிருந்து தூரத்தூர விலக்கப்பட்டிருக்கின்றன.

அன்பு என்பது நம்மைப்போன்றுள்ள ஆண் பெண்ணான மனிதர்கள் எல்லாரின்பாலும் மற்ற உயிர்வாழ் இனங்களின் பாலும் செலுத்தப்படுவது அதாவது அனைவரும் ஓரினம்என்பதைக்காட்டும் பிணைப்புப் பாசம் அன்பு.

ஆனால் மதங்கள் பலப்பலதோன்றத் தோன்ற இந்த இன அன்பு என்பது பலப்பலவெறுப்புகள்; பகைமைகளாக மாறிவந்திருக்கிறது—மாறிவந்த வண்ணமிருக்கிறது. மதம் என்பதுதோன்றி இதுவரை எத்தனையோமதப்போராட்டங்கள் தோன்றி யிருக்கின்றன. அன்பே கடவுள், பிறனைநேசி, அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கிவிட்டுவிட்டால் இன்பநிலை தானேவந்தெய்தும் என்ற அறமொழிகளை, தெளிவுறவுணர்ந்து மெய்யறிவு பெற்றிருந்தால் இந்த மதப்போராட்டங்களுக்கு வழியேது?

இந்த இனமித்திரபேதத்துடன் மாத்திரம் போகவில்லை, குள்ளமன மதப்பான்மை: மற்றும் குடும்பவாழ்க்கையிலும் மித்திரபேதம்வைத்தது அதுவும் போதாதென்று தன்உடலுக்கும் தானே மித்திரபேதம் செய்து கொள்ளும்படியும் உபதேசித்தும், கட்டுப்பாடுகள் செய்தும் கட்டளைகள்இட்டும், பயமுறுத்தியும் வந்திருக்கிறது.

இந்த மித்திரபேதங்கள் எக்காலத்தில்; யாரால் உண்டாயின என்று, திட்டவட்டமாகச்சொல்ல வியலாதிருக்கிறது. ஆனால் இவைகள் முற்காலத்ததாயினும்,பிற்காலத்ததாயினும் இடைக்காலத்ததாயினும் ஒன்று மாத்திரம் துணிந்து கூறலாம். அதாவது, காலதேசவர்த்தமானத்தை ஒட்டியும் ஏதோ ஒரு குழுவினர் அல்லது பிரிவினரின் தனிநலத்தை யுத்தேசித்தும் இந்தக் கட்டுப்பாடுகள் ஏற்பட்டிருக்கவேண்டும். எந்த இடத்தில்; எந்தகாலத்தில், இவைகள் முதல்முதலாகத் தோற்றுவிக்கப்பட்டனவோ அந்தக்காலத்தில் அந்த இடத்தில் அந்த நாட்டுமக்களுக்கு இவைகள் தகுதியுள்ளவைகளாகவும் தேவைப்பட்டவையாகவும் இருக்கலாம். இவைகள் எப்போதும் நிரந்தரமாக நீடித்திருக்கவேண்டும்; எல்லாரும், எல்லாக்காலங்களிலும் கைக்கொள்ள வேண்டுமென்ற கருத்துடனே தோற்றுவித்திருக்கமுடியாது.

எமது கருத்து சரியானதென்பதற்கு ஆதாரம் நாயன்மார்களும், ஆழ்வார்களும் பாடிவைத்துள்ள திருமொழிகளும், திருவாசகங்களுமேயாகும்.

ஆண்டவரின் திருவவதார திருவிளையாடல்களும் இக்கூற்றைவலியுறுத்தும்.

1. கடவுள் ஒருவரிடமே பக்தி செலுத்து.
2. பிறனை வெறுத்தொதுக்கு.
3. பெண்களை வெறு.
4. உன்னையே வெறு.

என்று எந்த மதமாவது உபதேசிக்குமானால், அது கடவுள் படைப்பின் நோக்கத்தையே அவமதிப்பதாகும் தகாதவழியில் பயன்படுத்துவதாகும்.

வெறுக்கவும் ஒருக்கவும் சாகவும் நம்மை என் படைப்பிக்கவேண்டும் அந்தக் கடவுள்? எந்தப்பெற்றோர்களாவது தம்மக்கள் ஒருவரையொருவர் வெறுக்கவும், அடித்துக்கொண்டு சாகவும், அல்லது தம் உடலை ஒடுக்கி தற்கொலைக்கொப்பான நிலைமை எய்திக்கொள்ளவும், விரும்புவார்களா?

எனவே வாழ்க்கைத்துறவு, பெண்மைத்துறவு, உடல்துறவு என்பவைகள் இடைகால இடைச்செருகல் கோட்பாடுகளாகத்தான் இருக்கவேண்டும்.

அதாவது இப்போது ஏற்பட்டிருக்கிறதே? ஜனப்பெருக்கமும், பொருள் சுருக்கமும்; இதைப்போல் ஏற்பட்டிருந்த ஒருகாலத்தில் தான் இந்தத் துறவுக்கதையும் நாடகமும் தோன்றியிருக்கவேண்டும். தமிழகப்பண்டைநூல்களை ஆராய்ந்து பார்த்தால் இந்தத்

துறவு—வெறுப்புப் பண்புகளை காண வியலாது. அப்படியானால் இவைகளின் பிறப்பிடம் எது?

ஆம் வடஇந்தியாதான்—வடநாட்டவர்தான்! காரணம் என்ன? ஆரியர் பிறநாடுகளில் ஏன் பரவிக்குடியேறினார்கள்? பிறந்த தாயகத்திலே வாழ இடமின்மையாலும் வாழ்க்கைவசதிகள் இன்மையாலும்தானே? இதேபோல்வடநாட்டிலே குடியேறினர்: அப்போது பயிர்த்தொழில் பெரும் அளவில் இல்லை, வானம்பார்த்து இயற்கையில் விளைபவைதான் உணவு. ஆள் எண்ணிக்கை அதிகரித்தது: உணவுவசதி சுருங்கிற்று. உற்பத்தியைப் பெருக்க வழியில்லை அல்லது வழிதெரியவில்லை. வண்டியில் அதிக கூட்டமானால் வண்டியை விஸ்தரிக்க முடியுமா? ஆளைத்தானே இறக்கவேண்டும்? எனவே, தங்களுக்குள் ஆள் உற்பத்தியைக் குறைக்கலானார்கள். இப்போது கர்ப்பத்தடைப்பிரசாரம் நடப்பதுபோலத்தான். இதற்குப் பிரசார இயந்திரமும் முடுக்கிவிடப்பட்டது. "மூடைநாற்ற உடலடா? அநித்தியமடா" என்ற பிரசாரம் தொடங்கப்பட்டது. இந்த அனித்திய உடலை விரைவில் அநித்தியமாக்க, விரத, தவ அனுஷ்டானங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

ஆனால் உடல் சுருக்கத்தால் உணர்ச்சி சுருங்கவில்லை. ஆள் உற்பத்திசுருங்கவில்லை. அதனால் கருவிலே கை வைக்க வேண்டியதாயிற்று. அதாவது உற்பத்தி இணைப்புஇயந்திரங்களான ஆணையும் பெண்ணையும் பிரித்து வைத்தனர். உற்பத்திசக்தியை பூண்டிலே அழித்தனர்: பெண்மையை வெறுத்தொதுக்கச்செய்தனர். தனித்து தவம்செய்து நேரிடையாக ஆண்டவன் திருவடிநிழலை அடையத்தூண்டிவிடப்பட்டனர்: இல்லறம், ஆண்டவனை அடைய வியலாது தடுக்கும்தடைக்கல், பயங்கர விஷ அகழி என்றும் பயமுறுத்தினர்.

இவ்விதம் ஆள்பெருக்கத்தைத் தடுக்க மற்றொருகாரணமும் உண்டாயிற்று. அதாவது நாட்டாசையும் சண்டையும் மக்கள் பெருக்கம் அதிகரிக்க வதிகரிக்க அதிக நிலப்பரப்பு தேவைதானே? அப்போது ஏற்படுவது போட்டியும் போரும்தானே? இந்த நாசப்போர்களைத்தடுக்கவும் பொருளாசை, சுகபோக ஆசைகளைத்தணிக்க வேண்டியும் நேரிட்டிருக்கலாம். எனவேதான் உடலும்பொருளும் அநித்தியமென புத்திபுகட்ட முற்பட்டிருக்கலாம். மற்றும் பெண்களைக்கவர்வதே அப்போது போரில் வெற்றிச்சின்னமாகவும் கருதப்பட்டது. இப்போதும் இது நடப்பதுதானே. பெண்என்றாலே ஆண்களுக்கு ஒருவிதவெறி கிளம்புவதும் இயற்கையின் விபரீதம்போலும். இவ்வகையில், தாய்மையந்திரமான பெண்ணினத்திற்கு ஊறு நேராமலும் காக்க இந்தவெறுப்புப் பிரசாரம் தொடங்கியிருக்கவேண்டும். மற்றும் தற்காப்பாகக் கற்புக்கனலையும் தோற்றுவித்திருக்கவேண்டும்.

பண்டைத்தமிழ்நூல்களான அகத்துறைகளில் இந்தத்துறவுப்பண்போ, வெறுப்புமதமோ காணக்கிடைக்கவில்லை,

காதலனும் காதலியும் இணைந்த இல்லறம் நடத்தி இறைவனைவணங்கினர் என்பதே அகத்துறைநூல்களின் மணிச்சுருக்கக் கருத்தாகவிருக்கிறது: இல்லறவாழ்க்கை சிறப்புச் செய்யப்படுகிறதேயன்றி துறவின் தூண்டுத்துதலுக்கு வாசனைகூட அவற்றில் காணக்கிடைக்கவில்லை.

"இல்லற மல்லது நல்லறமல்ல" என்பது மணிக்குறள்.

உடலின்நோக்கமே உறுதுணைவாழ்க்கைதான். உயிரினம் யாவற்றிற்கும் இது பொது.

கடவுள் என்பது படைப்புச்சக்தி. நம்மை படைத்துக்காத்துப்பண்பளித்த அந்தப்படைப்புச்சக்திக்கு நமது நன்றியைச்செலுத்துகிறோம்; மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இது நியாயமும் நேர்மையும் கடமையுமாகும். ஆனால், கடவுள்வேறு நாம்வேறுஎன்பதல்ல. கடவுள்மூலசக்தி: அந்தமூலசக்தியிலே நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அணுசக்தி. பரமாத்மா எனக் கடவுளையும் ஜீவ்ஆத்மா என்றுமனிதரையும் குறிப்பிடுவது இந்த கூற்றைவலியுறுத்தும்.

சமூகசேவை என்பதும், மக்கள் சேவையே. தேசசேவையென்பதும் மக்கள் சேவையே: இதேபோல் கடவுள் சேவை என்பதும், மக்கள்சேவையே: கடவுள்பக்தி என்பதும் மக்கள்பக்தியே அதாவது நம்மைப்போன்ற மனிதர்களிடம் செலுத்தும் அன்பேயாகும்.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் காட்டிய பக்திமார்க்கம் என்ன? துறவா? தவமா? இல்லையே! மக்களிடையே, வாழ்ந்தனர்; மக்களிடம்அன்பு செலுத்தினார்கள், மக்கள்நல்வழிப்பட அன்புமதத்தை உபதேசித்தனர், அன்பு வாழ்க்கைப்பாடல்களைப் பாடிவைத்தனர்.

"அன்பர்பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"

என்றாரே அவர் கடவுள் நிலைஉணராதவரா? பக்தி என்பதை யறியாதவரா இவர்! கடவுள் வழிபாட்டை கற்காதவரா இவர்? கடவுளிடம் நேரிடையாக பக்தி செலுத்துவதை விட்டு, "அன்பர் பணி செய்யத்தன்னை ஆளாக்கும் படி என் கோருகிறார்.

இந்த அன்பர்பணியால் "இன்பநிலை தானேவந்தெய்தும்" என்ற மெய்யை உணர்ந்து கொண்டதால் தானே!

இன்பநிலை என்பது என்ன? பேரின்பம்: அதாவது, கடவுளின் திருவடி நிழலை அடைதல், அவருடன் ஒன்றறக் கலத்தல்; இதுவே பேரின்பம் எனும் அறநூல் பொதுப்படையாக: இந்தப் பேரின்பத்தை அடைய, ஆண்டவனிடம் அன்பு செலுத்து என்கிறதுமதம். — வேதாகமங்கள்.— ஆனால் மேலே சொன்ன அடிகளோ இந்த பேரின்பத்தையடைய எளிதான வழியைக்காட்டி அருளுகிறார்.

அதுதான் "அன்பர்பணிசெய்தல்"

"ஆண்டவன்பால் நீ உண்மை பக்தி செலுத்தவேண்டுமானால் அவருடைய படைப்பான மனிதர்களிடம் அன்பு செலுத்து" என்பதே பிறமதங்களும் உபதேசிக்கின்றன. 'உடலைச் சுருக்கு; உயிரை ஒடுக்கு' என்பது எம்மதத்திற்கும் சம்மதமாகாது.

"சாணும் வளர்க்க அடியேன்படும் துயரம் சற்றல்லவே" என்று ஏன் பரிதவித்தார் அந்த கடவுள் நிலையுணர்ந்த அறிவாளர்? உடலைச்சுருக்கும் கருத்திருந்தால்—மத வலுக்கட்டாயமிருந்தால், அந்த உடலை வளர்க்க அவர் ஏன் துயருறவேண்டும்? பசியாற்றாது துடிதுடிக்கவேண்டும்? தவமும் யாகமும் புலனடக்கமும் பொறியடக்கமும் அவருக்குத் தெரியாமலா போய் விட்டன?

"ஊன்வாட உண்ணாது உயிர்க்காவலிட்டு
உடலில் புலனைந்தும் நோந்து
நான் வாட வாடத் தவம்
செய்ய வேண்டாம்.

என்று திருமங்கையாழ்வாரும் ஏன் பாடினார்? தவத்தில் நம்பிக்கையில்லையா இவருக்கு? உண்ணா விரதத்தைப் பகைக்கும் சோற்றுப்பானையா இவர்? உடல்வாட உயிர்வாட தவம்செய்ய வேண்டாம்; பக்திசெலுத்தினால் போதும் என்றுதானே இவர் அறிவூட்டுகிறார்.

மற்றும் இவர் ஆண்டவன் இருப்பிடம் எங்கோ வைகுண்டத்தையும், பரமபதத்தையுமா காட்டுகிறார்?

"களங்கனிவண்ணா கண்ணனே என்றன் கார் முகிலே என நினைந்திட்டு உளங்கனிந்துருகும் அடியவர் தங்கள் உள்ளத்துள் ஊறிய தேனே"

என்று அடியவர்களின் பக்தி உள்ளம் என்ற தேன்கூண்டில் ஊறும் தேனாக்கி விட்டார் ஆண்டவனை.

அப்போது, ஆண்டவன் கோயிலான,—தேன் கூண்டான இந்த உள்ளத்தை—உடலை ஒடுக்க—நசிக்கச் செய்ய, வழிதேடுவது தகுமா? உடலை ஒடுக்குவது ஆண்டவனை விரட்டுவது போன்றதல்லவா? தவம் என்றால் என்ன? ஒரு இலட்சியத்தை அடைவதற்கான—விடாமுயற்சியே தவமாகும்! மனக்கட்டுப்பாடும் ஊக்கமுமே தவமெனப்படும்.

## கடவுளரும் காட்டுகிறாரே!

இல்லறத்துறவு என்பதுதான், கொஞ்சமும் பொருத்தமற்றதும், மிக மிக மோசமானதுமாகும். மற்றும் ஆண்டவனின் படைப்பின் நோக்கத்திற்கே துரோகம் சூழ்வதாகும்?

இல்லறத்தைத்துறந்துவிடு என்பது அந்த ஆண்டவனின் கட்டளையானால், சக்தி சிவம், லட்சுமிநாராயணன் நாங்கள்பிரம்மன் என்பன எப்படி வந்தன?

ஆதிப்பெரும் சக்தியின், முப்பெரும் சக்திகளான, ஆக்கல், காத்தல், அழித்தல் என்பனவற்றின் உருவகங்கள்தானே பிரம்மா, விஷ்ணு, சிவன் என்பன! அல்லது தனிப்பெரும் சக்தியின் முப்பிரிவுகளுக்கு இட்ட இடுகுறிப்பெயர்கள் என்று வேண்டுமானால் கொள்ளுவோம்: எப்படியிருந்தாலும் இந்த ஆண்டவனுக்கும், பெண்மைத்துணையிருப்பதாகத்தான் கோட்பாடு. இதன் உட்கருத்தென்ன? பெண்மையை வெறுப்பதாகுமா? இல்லையே! ஆண்டவனும் பெண்ணினத்தைத்துணை கொண்டிருக்கிறார், நாமும் அவ்வாறே வாழவேண்டுமென்பதுதானே?

ஆண்டவனின் திருவிளையாடல்கள் என்பனவும் திருவவதாரங்கள் என்பனவும் எதனைக்காட்டுகின்றன? இல்லற மகிமைதனை உபதேசிப்பனவாகத்தானே இருக்கின்றன?

தாருகவனமுனிவர் பத்தினிகளிடம் சிவனார் ஏன் திருவிளையாடல் நடத்தினார்? பெண்மையைப்பயன் பெறாது கட்டுப்படுத்தினார்கள் அந்தமுனிவர்கள்: எனவே இல்லற இரகசியத்தை தெளிவுபடுத்தினார்: கிருஷ்ணாவதாரமெடுத்து கோபிகாலீலைகள் ஏன் நடத்தினார் விஷ்ணு! இல்லறவாழ்வின் இணையற்ற சிறப்புகளை விளக்கத்தானே! சிவவிஷ்ணுவின் அவதாரங்களில் பெரும்பாலானவை திருமண வைபவத்துடன் தான் விளங்குகின்றன,

இவைகள் எல்லாம் இல்லற வெறுப்பை ஊட்டுவனவா? இல்லறத்தின் சிறப்பைக் காட்டுவனவா? இந்தத் திருவிளையாடல்கள் உண்மை என்பராகில், நாமும் இவற்றின்படி நடக்கவேண்டுமென புத்திபோதிப்பது தானே தகுதி. இன்றேல், கட்டுக்கதை என்பாராகில், இதன் ஒழுக்கவீனத்தை ஒப்புக்கொள்பவராகிறார்கள். அப்போது இந்த ஒழுக்கக்கேடான கட்டுக்கதைச் சுவடிகளை சுட்டெரிக்க வேண்டுமென்று திராவிட கழகத்தார் கூறுவதில் என்ன தவறிருக்கிறது? காலத்திற்கேற்கா இந்த ஒழுக்கக்கேட்டுவரலாறுகளின் மீது, ஏன் தணிக்கைசட்டத்தைப் பாய்ச்சி, வெட்டிப்புதைக்கலாகாதென்றுதானே நேர்மையுலகம் கேட்கும்?

பெண்மைக்கு, பெண்ணினத்திற்கு மானக்கேட்டை, பழிப்பைக் கூட்டுவிக்கும் இந்த வரலாறுகளை சுட்டுப் பொசுக்கவேண்டுமென்றுதானே பகுத்தறிவுள்ள இப்போதைய பெண்ணுலகம் வீறுகொண்டு குமுறி, போர்முரசு கொட்டிப் படையெடுக்கும்? இந்த அவமான சின்னத்தை ஒழித்துக்கட்ட "அமேஜான்" படைகள் கிளம்பித்தானே தீரும். ஸ்ரீலஸ்ரீ அவளூசிலிங்கம் சாமியாரவர்களும் ஸ்ரீஜத் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரவர்களும் தங்கள் பக்தி கண்கள்கொண்டு பார்க்கத்தான் வேண்டியதாகும் இந்தப்பெண்ணினத்தின் மானங்காப்புப் போராட்டத்தை, கடவுள் வேடத்தில், பெண்ணின இழிவு புராணங்களுக்கு தற்காப்புக் கோட்டை கட்டுவது மணற்கோட்டையாகும். காலம் வெகுவிரைவில் வந்துதான் தீரும். எனவே, உண்மை மதப்பற்றும், மக்கள்பற்றும், இருக்குமானால், காலத்திற்கேலாத கேவல கற்பனைக்கதைகளைக்கூறி மக்கள்பகுத்தறிவைக் கெடுப்பதை சட்டவிரோதமாக்க வேண்டும். அன்பர்பணிசெய்வதே உண்மைபக்தி. அதுதான் ஆண்டவன்சேவை; மோட்சம் நரகமெல்லாம் கற்பனைப்பித்தலாட்டமென்று மக்களிடம் வெட்ட வெளிச்சமாகச் சொல்லியாகவேண்டும். பகுத்தறிவுலகம் இனிமேல் ஒருகாலும் ஏமாறாது. ஏமாற்றவுமியலாதென்பதையும் எடுத்துக்காட்டி எச்சரிக்க வேண்டியிருக்கிறது.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்
உடுமலை பீரங்கி

சந்தா விவரம்
பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்.

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 0—1—0 |
| 6 மாதங்களுக்கு | ரூ. | 1—8—0 |
| 1 வருஷத்திற்கு | ரூ. | 2—8—0 |

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

காரியாலயம்
33 திருவேங்கிட முதலித் தெரு
பெரியமெட்டு. சென்னை, 3.

வாசித்தாகவேண்டிய புத்தகம்.
"உடுமலை பீரங்கி"
(முதல் புத்தகம்)




120 பக்கங்கள்
சில பிரதிகளே பாக்கியுள்ளன.
பிரதி 1க்கு விலை அணா 12.
தபால் சார்ஜ் வேறு
பீரங்கி புத்தக நிலையம்,
33. திருவேங்கிட முதலித் தெரு,
பெரியமெட்டு, சென்னை. 3

கிராமத்து நகைச்சுவைக் கதை

# வாய்வீரன் வீர நாயக்கன்

PVRV

[illegible]ட்டுக்கூடு கட்டுக் கோனி
கட்டாரி எத்துக் கோனி
[illegible]னேட்டிக்கு
போயேடபுடு
[illegible]துபுதலோ பூந்தனே
கட்டுக்கூடு இந்து படே
கட்[illegible]ரி அந்து படே

இது கம்பன் கோட்டையை அடுத்துள்ள கிராமங்களில் வசிக்கும் கம்பளத்து நாயக்கன் மார்களில் பாட்டன் பாட்டிகளாக இருப்பவர்கள் சொல்லும் நகைச் சுவைப் பாட்டு; கிண்டல் பாட்டென்றும் சொல்லலாம். அதாவது உண்மையில் நெஞ்சில் வீரமில்லாமல், வாய் வீரம் பேசும் சவடால் பேர்வழிகளைக் கிண்டல் செய்ய இந்தப்பாட்டை பாட்டன் பாட்டிகள் சொல்லிக் காட்டுவார்கள்.

இத்தப்பாட்டில் சொல்லப்பட்டிருப்பது ஒருவாய் வீரனின் கதை.

கம்பன் கோட்டை என்பது ஆனைமலைத் தொடர்ச்சியில் மூணாறுமலை வட்டாரி வில்கோவை ஜில்லா உடுமலைப் பேட்டைத் தாலூக்காவைச் சேர்ந்த பகுதியாகும் இந்தக்கோட்டையை, இராமாயணம் பாடிய கம்பன் கட்டிய தென்பர்சிலர் மைசூரையாண்ட கம்பண்ணன் என்ற ஆந்திர மன்னன் ஒருவன் இருந்தான். இவன் தன் மனைவியின் விருப்பம்படி மதுரையை முசல்மான்களிடமிருந்து மீட்கப் படையெடுத்துச் சென்றான். வழியில் இந்த மலைப்பிரதேசத்தில் இராத்தங்கல் தங்க நேர்ந்தது இங்கே முயலும் மானும் வீரத்துடன் நரிகளுடன் போராடுவதைக் கண்டனர் அரச தம்பதிகள் எனவே இது பலமிக்க வீர மண் எனக்கண்டு இந்தக் கோட்டையை கட்டினராம்.

இவருடன்வந்த கம்பளத்து நாயக்கர் இனத்தவர் இங்கேயே குடியேறி விவசாயம் முதலிய தொழில்களில் ஈடுபட்டனர். பாஞ்சாலங் குறிச்சி கட்டபொம்மு ஊமை துரை இவர்கள் இவர்கள் இனத்தவரே. இவர்கள் இன்னும் கிராமாந்திரங்களில் தங்கி விவசாயத் தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர் ஜோசியம் கூறும் கோடங்கிகளாகவும் இருக்கின்றனர். இவர்கள் பேசும் தெலுங்கும் ஆதித் தெலுங்கு குடிகள் பேசுவது போலத்தானிருக்கிறது.

குட்டிக்கதைகள் பழமொழிகள் சொல்லி பிறரை மகிழ்விப்பதில் கெட்டிக்காரர்கள். இவர்கள் சாதாரணமாகப் பேசும் பொழுதே குட்டிக்கதையும் பழமொழியும் மில்லாமல் பேசுவது அரிது,

அவர்கள் கூறும் உதாரணக்கதைதள் பெரும்பாலும் பாட்டு உருவத்தில் இசையுடன் இருக்கும்.

மேலே சொன்னது வாய் வீரனை கேலிசெய்யும் மழமொழி இதற்கு அர்த்தம் கேட்டால் அவர்கள் கீழ்க்கண்ட கதையைச் சொல்லுவார்கள்:—

வீர நாயக்கன் என்பவன் நல்ல தடியன். ஆனால் அசட்டுக் குணமும், தற்பெருமையும் அதிகம். இவனை தட்டிக் கொடுத்து குஷி படுத்திவிட்டால் அல்லது, சாப்பாடோ, பலகாரமோ, கடலை பொரியோ தருவதாகச் சொன்னால் போதும். யார் எந்த வேலை சொன்னாலும் செய்வான்.

மத்தியான வேளையில் ஆண்கள் தோட்டம் துறைகளுக்குப் போய்விடுவார்கள். பெண்களும் குழந்தைகளும் தான் வீட்டில் இருப்பார்கள். அப்போது ஆடுமாடுகள் ஓடிவந்து கழுநீர்காக வீட்டிற்குள் நுழையலாம் அல்லது கன்றுகுட்டிகள் கட்டவிழ்த்துக் கொண்டு ஓடிவிடலாம். அப்போது பெண்கள் அவனை மாடு பிடிக்கச்சொல்லிக் கூப்பிட மாட்டார்கள், 'அடேவீர இந்தாடா கடலைபொரி என்றுதான் கூவுவார்கள் இவனும் ஆசையோடு ஓடுவான் அப்பெண்களும்" சாமி, அதோ, ஓடு ஓடு. கன்னுக்குட்டி ஓடுது பிடிச்சா கடலைபொரி பணியாரம் எல்லாம் தாரேன் கெட்டிக்காரனல்ல நீ. போ போ'' என்று தட்டிக்கொடுத்து அனுப்புவார்கள் அவனும் கன்றையோ மாட்டையோ பிடித்து வந்து கடலை பொரியோ பணியாரமோ வாங்கிக்கொண்டு ஓடுவான்.

இப்படியே அவன் ஊரார் தரும் சாப்பாட்டிலேயே காலம் கழித்து வந்தான் வயதேறவேற ஊரார் தரும் சோற்றை எதிர்பார்க்கும் சோத்து முத்தன் ஆகிவிட்டான். ஒழுங்காகத் தோட்ட வேலை செய்யப் போவதில்லை வீடு வீடாகச் சென்று பெண்கள் சொல்லும் சிறுவேலைகளைச் செய்து வயிறு நிரம்பி வந்தான்.

பொங்கல் பண்டிகை தீர்ந்ததும் எல்லாரும் கோயில் மரத்தடியில் உட்கார்ந்து பழமை பேசுவது வழக்கம்.

அப்போது, சின்னஆற்றுப் பகுதியில் ஒருபுலி பதுங்கிக்கொண்டிருப்பதாகவும் ஆடுமாடுகளைக் கொன்று தின்பதாகவும் சிலர் சொன்னார்கள் ஊர்க்காரர்களெல்லாம் கூடிப்பேசி மறுநாள் வேட்டைக்கு போவதாக முடிவு செய்தார்கள்.

அப்பொழுது ஒரு கிழவிவாய் இருக்காமல் வீர நாயக்கனைக் கேலிசெய்யத் தொடங்கினள் அவள் மற்றவர்களைப் பார்த்து "நீங்கள் எல்லாம் ஏன் போக வேணும் இதோ நம்ம வீரநாயக்கன் ஒருத்தனை அனுப்பினாலே போதுமே புலியை புளியங்காயைப் போல தட்டிப் போட்டுக் கொண்டு வந்துவிடுவானே" என்று சொல்லித் தன்பொக்கை வாய் தெரியச் சிரித்தாள். மற்றவர்களும் வீரநாயக்கனைப் பார்த்துச் சிரித்தார்கள் சிலர் வேட்டைக்கு புறப்படும்படி அவனைத் தூண்டினார்கள்.

அவனும் "போறேன் ஆனால் சோறு......? என்றான்.

இந்த வேடிக்கையைப் பார்க்க வந்த பெண்கள் எல்லோரும் சோறு கட்டிக் கொடுக்கச் சம்மதித்தார்கள்.

மறுநாள் விடிந்ததும் பெண்கள் எல்லோரும் சேர்ந்து யானைத்தலைபோல ஒரு கட்டுச்சோத்து மூட்டையைக் கொண்டுவந்து வீரநாயக்கனிடம் கொடுத்தார்கள்.

வேட்டைக்குப் போவதென்றால் சோற்று மூட்டைதான் போதுமா? கத்தியும் வேல்கம்பும் வேண்டுமே!

பெரிய அரிவாள் (கட்டாரி) ஒன்றையும் கொண்டுவந்து கொடுத்தார்கள். யானைத்தலைபோல் சோற்று மூட்டையைக் கண்டதும் வீரநாயக்கனுக்கு உற்சாகம் கிளம்பிவிட்டது. சோற்று மூட்டையைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு எல்லாருக்கும் முன்னதாகக்கிளம்பிச் சென்றான். மற்றவர்கள் நாய் தடிகள் ஈட்டிகளுடன் பின்னால் சென்றனர்.

இப்படிப் போகும்போது சின்னாற்றுக்கரையை நெருங்கினார்கள், மலையாகையாலும் ஆற்றங்கரையாகையாலும் அங்கங்கே புதர்களும் செடிகளும் அடர்ந்திருந்தன.

வீரநாயக்கன் எல்லோருக்கும் முன்னால் சென்றான். அப்போது முன்னாலிருந்த புதரிலிருந்து "பூத்"தென்று சப்தம் கேட்டது. வீரநாயக்கன் 'ஐயையோ' என்று அலறிக்கொண்டு, நடு நடுங்கி, ஓடவும் கால் வராதபடியால், தடுமாறி விழுந்து குப்புறப் படுத்துக்கொண்டான். அவன் வலது கையிலிருந்து கட்டாரி (வாள்) எங்கேயோ தொலைவில் போய் விழுந்தது. ஆனால் சோற்று மூட்டை மாத்திரம் அவன் பக்கத்திலேயே விழுந்தது. அவனும் சோற்று மூட்டை மேலேயே படுத்துக் கொண்டான்.

அவன் அலறலைக் கேட்ட மற்றவர்களும் ஓடிவந்தார்கள் அவன் புதரை சுட்டிக்காட்டி 'புலி புலி' என்று உளறினான். எல்லோரும் புதரைச் சூழ்ந்து கொண்டு நாய்களை உசுப்பிவிட்டுப் புதரைக் கலைத்தார்கள். புதரிலிருந்து பறந்து வந்தன இரண்டு மூன்று ஆந்தைகளும்செம்பூத்துகளும். இதைத் தவிர்த்துப் புலியோ நரியோ எலியோ அந்தப்புரத்தில் காணோம். இதைக் கண்டு எல்லோரும் வீரநாயக்கனைச் சூழ்ந்துகொண்டு, கேலி செய்து, கிரிகிரி என்று சிரித்தார்கள்.

---

மூளைக்கு வேலை

# பகுத்தறிவு போர்க்களம்.

## விஷயம்:—மோட்டார் பஸ்களில் பெண்களைக் கண்டக்டர்களாக நியமிப்பது அவசியமா? நியாயமா?

## நேயர்களின் கருத்துக்கள்.

திருப்பூர். 14-11-48,

உடுமலை பீரங்கி ஆசிரியர் அவர்களுக்கு:—ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமஉரிமை உண்டு. சம அந்தஸ்து உண்டு: ஆகவே பெண்களும் பஸ்களில் கண்டக்டர்களாக வேலை பார்ப்பதற்கு அமருவது மிகவும் நல்லது. ஆனால்? சிலர் கூறலாம் பெண் கெட்டுப்போய் விடுவாள என்று. அது தவரான எண்ணம். பெண்கள் கெடுவதற்கு மூல காரணம் ஆண்கள் தான் என்பதை நன்கு உணரவும். மேல் நாடுகளிலே பெண்களும் பல பெரிய பெரிய வேலை களை செய்து வருகின்றனர். அங்கு ஆண்களும் பெண்களும் சம அந்தஸ்துடன் கைகோர்த்து உல்லாசமாக வெளியில் வாழ்கின்றனர். அவ்விதமே நம் நாட்டிலும் ஏற்படவேண்டும். நம் நாட்டுப் பெண்மணிகளும் பெரியபடிப்புகளும் படிக்கின்றனர். ஆனால் அவற்றை உபயோகிப்பதில்லை. வீட்டில் சமையல் செய்ய உட்கார்ந்து விடுகின்றனர். இதன் காரணமாகத்தான் நாடு க்ஷீணதிசையை அடைகின்றது.

நாட்டை முன்னணியில் கொண்டு வரும் பொருப்பும் ஆண், பெண் சகஜமாகப்பழகி வருதல் அவசியம். ஓர் குடும்பத்தில் தாய்தந்தையர்கள் ரொம்பவும் வயோதிகர்களாக இருக்கலாம். அவர்களுக்கு ஒரே பெண் மட்டும் இருக்கலாம். நன்கு அப்பெண்படித்திருக்கலாம், இவ்விதம் இருக்குங்கால் அவர்கள் வாழ்வதுதான் எப்படி? அப்பொழுது பிழைக்கும் வழி, யாது?

படிப்பு உண்டு, வேலை தெரியாது. சேர்ந்து பழகலாம் என்றால் வெட்கம் வந்து விடுகின்றது. ஆடவர்கள் இம்சிப்பார்கள் என்ற பயம் வேறு. ஆகவே ஆண்களும் பெண்களும் சமவுரிமையுடன் நெருங்கிப் பழகிவந்திருந்தால் இப்பொழுது எதற்கு இந்த தொல்லை? பழகப்பழக பாலும் புளிக்கும் என்பது போல் பெண்களிடம் நெருங்கிப் பழகிவந்தால் தீய எண்ணங்கள் கூடிய சீக்கிரம் விட்டகலும். பிறகு க்ஷேமமாக சம்பளத்தில் அமர்ந்து தன் குடும்பத்தை சீரும் சிறப்புடன் நடத்திவரலாம் ஆகவே பெண்களும் கண்டக்டர் ஆக அமர்வது நல்லது தான் என்பது எனது அபிப்பிராயம்.

R. R. ராமசுவாமி.

---

கருவூர் 14-11-48

"பெண்களைக் கண்டக்டர்களாக நியமிக்கப்படுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். பெண்களுக்கு சமுதாயத்தில் சம அந்தஸ்து அளிக்க வேண்டியது தான். அதற்கு இத்தகைய கடினமான வேலைகள் தானா கிடைத்தது ஆட்சியாளருக்கு! பெண்களைக் கண்டக்டர்களாக நியமித்தல் ஆட்சியினருக்கு பெருமையளிக்கக் கூடியதல்ல. ஆட்சியினருக்கும் நாட்டுக்கும் இழுக்கையே தேடித்தரும், மேலும் பெண்களுக்கு ஓடும் வண்டியில் ஏறி இறங்குவதும், கூட்டங்களை சமாளிப்பதும் இயலாத—நடவாத காரியம். பெண்கள் ஆண்களைப்போன்று திடகாத்திர முடையவர்களல்லர்—துணிவு படைத்தவர்களுமல்லர். ஒருபெண் கண்டக்டராக இருப்பதால் பலவிதமான இன்னல்களுக்கும் வீண்பழிகளுக்கும் ஆளாக நேரிடும். இவ்வேலை பெண்களுக்கேற்ற கண்யமான வேலையல்ல. இதனை அறியாத இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது வருந்தத்தக்கது. எனவே ஆட்சியினர் பெண்களுக்கு இத்தகைய வேலைகளை அளிக்காமல் அர்சாங்க அலுவலகங்களில் வேலைகளளித்தால் பெண்களினத்திற்கு ஒரு வகையில் நன்மையிழைத்தவர்களாவார்கள் - நாட்டின் மானத்தைக் காப்பாற்றினவராவார்கள்."

கரூர். டி. எஸ். ஜான்ஸன்

குறிப்பு:—எக்கருத்துக்கும் இடமுண்டு. அறிவுக்குப் பொருந்திய தக்க நியாயங்களே தேவை. (ஆ. ர்.

---

6.ம் பக்கத்தின் தொடர்ச்சி

பின் எதிரொலி அல்ல. இந்த உலகக் குமுறல் நிலைமையில் யாரயிருந்தாலும் திணறத்தான் வேண்டுமென்பதை நாமும் அறிவோம். பல்லோர் தத்தமது கருத்துக்களை வெளியிட்டால் நல்லதை அடையவழி ஏற்படலாம் என்ற கருத்தின் மீதுதான் நாமும் இதனை எடுத்துக் கூறுகிறோம். எனவே, மக்களை இப்போது வாட்டிக்கொண்டிருக்கும் இந்த இரண்டு மாபெரும்வால் நக்ஷத்திரங்களின் பீடையிலிருந்து மீள வழிசெய்வதே அனைவரின்—முக்கியமாக ஆட்சியாளரின் கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தேவை.

ஒரு சிறு அச்சாபீசு கிரயத்திற்கோ அல்லது மாதக் குடிக்கூலிக்கோ உடனே தேவை. அச்சாபீசு சாமான்கள் அச்சுகள் முதலியவைகள், உபரிகள், பழையவிலையில் இருந்தாலும் வெளியூர்களில் இருந்தாலும் சரி. பூராவிவரங்கள் தேவை.

மானேஜர்.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்
உடுமலை பீரங்கி
ஆசிரியர் உடுமலை B.இரங்கநாதன்

வாரப்பதிப்பு.

| சென்னை | சனி | 20-11-48 |
| --- | --- | --- |

# ★ மது விலக்கு 2 ★

கோவை ஜில்லா அனுப்பட்டு கிராமத்தைச்சேர்ந்த ஒருவர் 1947 ஜூலை 3-ந்தேதி பர்மிட் இல்லாமல் 10 சொட்டு பிராந்தியுடன் கூடிய பாட்டில் ஒன்றை வைத்திருந்ததாக வழக்கு தொடரப்பட்டிருந்தது. எதிரி தான் ஷை பாட்டில் வைத்திருக்கவில்லை என்று வாதாடினர். மாஜிஸ்திரேட் எதிரிக்கு 6 வார கடுங்காவல் தண்டனை விதித்தார் இதை முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டும் ஊர்ஜிதம் செய்தார்.

அப்பீலில் மேற்படி தண்டனையை ரத்துச் செய்து அப்பீல் நீதிபதி பின்வருமாறு குறிப்பிட்டார்.

“எதிரியின் வாதம் சரியா அல்லவா என்பதைப்பற்றி ஆராயத் தேவையில்லை. என்னுடைய கருத்தில் இக்குற்றம் மிகவும் அற்பமானது. இம்மாதிரி விஷயங்களில் நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது சரியாகக் கையாள முடியாத 10 சொட்டு பிராந்தியை ஒருவர் மறைத்து வைத்துக்கொள்ள வேண்டிய காரணத்தை பிராஸிகூஷன் தரப்பு விளக்கவில்லை. மதுவிலக்குச்சட்டத்தின் நோக்கம் மக்கள் குடிபோதைக்கு உட்பட்டு தங்களுக்கும் சமூகத்துக்கும் தீங்கு விளைவிப்பதை தடுப்பதேயாம். இம்மாதிரி வழக்குகளைத் தொடருவதால் சட்டம் சரிவர அமுல் நடத்தப்படுவதற்குத் தான் இடைஞ்சலாக இருக்குமே தவிர அதற்கு உதவியாக இராது” என்பது செய்தி.

இது ஒரு ரசமான சம்பவம் என்பதில் சந்தேகமேயில்லை. அதே சமயத்தில் எல்லவருக்கும் ஒரு ..ங்க படிப்பினையூட்டுவதுமாகும். குடிப்பழக்கத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு மாத்திரமல்ல. ஆனல் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்த ஆட்சியாளருக்குங் கூட. 10 சொட்டு பிராந்தி ஒரு புட்டியில் இருந்ததெனக் கேசைப் பதிவு செய்து கோர்ட்டுக்குக் கொண்டு வந்தவர்களைப் பரிகசிப்பதா? அல்லது அற்ப விஷயம் என்றே கேசைத்தள்ளி விட்ட நீதிபதியின் பேரில் பழியை சுமத்துவதா? என்ப விஷயங்களை ஆராய முன்வரவில்லை. கேசின் தாரதம்மியத்தைப் பற்றியோ அல்லது தீர்ப்பின் போக்கைப் பற்றியும் நமக்குக் கவலையில்லை. ஆனல் ஒன்று, உண்மை. இருந்தது பத்துச்சொட்டு. ஆனல் செலவானது எவ்வளவோ யிருக்கலாம். இச்சம்பவத்தால் கேசுக் கிறையான வருக்கு நஷ்டமிருக்க முடியுமே தவிர சர்க்காருக்கு எவ்வித லாபமும் இருப்பதற்கில்லை. ஆனல் நஷ்டமென்னமோ உண்டு. வரிப்பண விரையமும் உண்டு. இது பொய்யுமாகாது. இதற்கு எவரை நோவது? எய்தவனிருக்க அம்பை நொந்து கொண்டதனல் என்ன பலனுண்டாகும்?

கேசில் அகப்பட்டவர் குடிகாரர் என்றே வைத்துக்கொள்வோம் அவர் குடிப்பதற்காகவே புட்டியைக் கொண்டு வந்தார் எனவும் வைத்துக்கொள்வோம். புட்டியில் இருந்த 10 சொட்டும் அவர் குடித்த மிச்சமென்றும் சொல்வோம், சட்டப்படி அவர் தண்டிக்கப்படவேண்டியவரே யென்பதையும் ஒத்துக்கொள்வோம். சட்டமொன்று இருக்க அதை மீறின் அது எவ்வகையில், எவ்வளவு என்ன ரூபத்தில் இருந்தால் தானென்ன? குற்றம் குற்றந்தானே. அதனல் அன்னருக்காக நாம் தப்பை கட்டி பரிந்தெடுத்துப்பேச முன்வருவதாக எண்ணின் அது பிசகாகும்.

ஆனல், ஒன்றை மாத்திரம் ‘நீதி’ என்ற முறையில் கவனிக்க வேண்டுகிறோம். இச்சட்டம், மதுவிலக்குச் சட்டம், நேற்று வரைக்கும் யோக்கியர் என்று இருந்தவரை இன்றையத்தினம் அயோக்கியராக்கி விட்டது. நடவடிக்கை வித்தியாசத்தாலல்ல. ஆனல் சட்ட வித்தியாசத்தால். நேற்றுவரை மரியாதஸ்தர் என இருந்தவர் இன்றையத்தினம் மரியாதையில்லாதவர் எனச் செய்து விட்டது மதுவிலக்குச் சட்டம். சட்டத்தையும் சட்டத்தைப் புகுத்திய ஆட்சியாளரையும் தாழ்மை படுத்த எத்தனிக்கும் முறையில் நாம் எழுதவில்லை. அவ்வெண்ணம் எமக்கு எப்பொழுதும் உதித்தது கிடையாது. ஆயினும் சில ரசமான உண்மைகளை ஆட்சியாளருக்கு எடுத்துக்காட்டவேண்டியது எம்முடைய பணியென்றே கருதுகிறோம். மதுவிலக்கை ஆதரிக்கும் முறையில் தக்க வழிகளைக் காணவேண்டுவது எம்முடைய களங்கமற்ற ஆவா. மதுவிலக்கை வெற்றிகரமாக்க வேண்டியதும் ஒவ்வொருவரின் கடமையினும் முதற்கடமையாகும்.

மதுவிலக்கைப் பற்றி எம்முடைய முதல் இதழிலேயே எழுதியுள்ளோம். அடுத்த இதழ்களில் தொடர்வதாகவும் கண்டிருந்தோம். அவ்விதம் யாம் செய்தோமில்லை- அதற்கு ஏதொரு விசேஷமோ நொண்டிச்சாக்கோ சொல்ல முற்படவில்லை.

இதுவரை வந்துள்ள சட்டங்கள் பலப்பல. அவற்றுள் அவசரங் கொண்டவைகளும் அவசியமுள்ளவைகளும் பலவும் இருக்கலாம் ஆயினும் ஒரு சட்டம் நிறைவேறுவது அந்த குறிப்பிட்ட சட்டம் நாட்டிற்குத் தேவையென்றோ அல்லது அவசரமென்றோ அல்லது முக்கியமென்றோ அல்லது இருந்துதான் ஆகவேண்டுமென்றோ அல்லது மற்றெவ்வித விசேஷ காரணங்களாலோ அல்லவென்பதை நாம் அறிவோம். ஒரு சட்டம் நிறைவேறுவதெல்லாம் கொண்டு வருபவரின் செல்வாக்கையும் சொல்வாக்கையும் பொறுத்ததேயாகும். அப்படிக் கொண்டு வந்த சட்டங்கள், இன்றைக்கு சாம்பிராணி தூபம் காட்டவும் ஆளில்லாமல், கரையான் அரிக்க விடப்பட்டிருப்பதையும் ஆட்சியாளரே ஒத்துக் கொள்வார்கள். அதுவே இல்லாவிடினும் அவ்வந்த சட்டம் கிரமப்படி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு நடவடிக்கை செய்யப்படுகின்றது என்று சொல்லவாவது வழியிருக்கிறதா? இல்லை என்பதை எடுத்துக்காட்ட அவ்வப்போது கோர்ட்டுகளில் நடக்கும் கேசுகளே போதும். எந்த நடவடிக்கையைக் குற்றமென்றுக்க சட்டம் வருகிறதோ அச்சட்டம் அமுலுக்கு வந்த பின்னும் அக்குற்றமே, முன்னிருந்த நிலையைக் காட்டிலும் அதிமோசமாகவே இந்நாள் வரைக்கும் நடந்து வருகிறதென்றால் பழியை எவர்மேல் சுமத்துவது? குற்றம் நடந்து வருவதற்கு எவரேனும் தனதாயிருக்கிறார்களா? அல்லது “மாமூல்” எனவே வழங்கப்பட்டுவரும் கப்பத்தின் பேரில் நடக்கிறதா அல்லது மக்களே சொந்தத் துணிச்சலின் பேரில் செய்கிறார்களா? என்ற சந்தேகங்களைக் கிளப்புவதும் விவரங்களைக் கிளறுவதும் வாசகர்களின் காலத்தை வீணுக்குவதேயாகும் என்பதை நல்லவண்ணம் தெரிந்துள்ளோம். ‘எது எப்படியிருப்பினும் அக்கதி மதுவிலக்குச் சட்டத்திற்கும் ஏற்படக்கூடாதென்றே விரும்புகின்றோம்.

இதே மதுவிலக்கு அமெரிக்காவில் முன்னொரு காலத்தில் அமுலுக்கு வந்தபொழுது சாராயங்களை பூட்டிகளாகவும், பீப்பாய்களாகவும், மற்றும் இதர வேறு வகைகளிலுமாக ஆற்றில் கொட்டியதைப் படம்பிடித்து, மெசொபொட்டேமியாவின் தலைநகரான பக்தாத்தில், திரையில் காட்ட கண்டுகளித்தோம். அப்பொழுதே அப்பாக்கியம் இவ்விந்தியாவுக்குக் கிட்டாதா என எதிர்பார்த்ததுமுண்டு. ஆனல் அமெரிக்கா மதுவிலக்கின் தோல்வியேயடைந்ததை உலகமே அறியும். அவ்வமெரிக்கா மாத்திரமேயல்ல உலகமே இன்றையத்தேதியில் இவ்விந்தியாவை எதிர்நோக்கி மதுவிலக்கு என்னகும் என்றே கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது என்பது ஆட்சியாளருக்குத் தெரியாததல்ல. அப்படியிருந்தும் “மதுவிலக்கு” வெற்றியேற்படும் திட்டத்துடன் ஏற்படவில்லை என்பதை நினைக்க மிகவும் வருந்துகின்றோம்.

சென்னை உள்பட எட்டுஜில்லாக்களில் மது விலக்குவந்து இன்னும் இரண்டு மாதங்கள் பூர்த்தியாகவில்லை. ஆயினும் இவைதவிர மீதமுள்ள ஜில்லாக்களில் மதுவிலக்கு அமுலுக்கு வந்து பலமாதங்களுமாயின. அந்த ஜில்லாக்களில் “மதுவிலக்கு” என்ன நிலைமையில் வெற்றி பெற்று வருகிறது என்ற உண்மையை ஆட்சியாளர் தெரிந்து கொள்ளு[illegible]படியான வசதியும் சந்தர்ப்பங்களும் ஏற்படாமலில்லை. ஏற்பட்டும் ஆட்சியாளர் பயன்பட்டதாகவோ அல்லது தமது திட்டத்தைத் திருத்தியமைத்த பாடோ இல்லையென்றே நிறுத்துவோம் இவ்வாரம்.

## வால் நட்சத்திம்

—: (o) :—

வால் நட்சத்திரம், தென்னிந்தியாவிலே தோன்றிற்று; வட இந்தியாவிலே தென்பட்டது; ஆஸ்திரேலியாவிலே தட்டுப்பட்டது. இன்னும் உலகில் எங்கெங்கோ காணப்பட்டதாக, தினசச்செய்தித்தாள்களிலே அடுக்கடுக்காகச் செய்திகள் பலநாட்களாக வந்தன. சாதாரணமாக அன்றாடம் கோடிக்கணக்கான நட்சத்திரங்களைக் கண்டு கண்டு கண்பூத்துப் போயிருக்கிறோம். அப்படியிருந்தும் இந்த ஒரு நட்சத்திரம் தென்பட்டதால் ஏன் இவ்வளவு பரபரப்பும் அக்கரையும்? இந்தியாவிலே? அதுவும் இந்துக்கள் - இந்து மதத்தினர் என்பவர்களுக்குள்ளே ஏன் இவ்வளவு கலக்கமும் கவலையும் சோகமும் துக்கமும் திகிலும் ஏற்படவேண்டும்? அதுவும் முப்பத்து முக்கோடி தேவர்களின் கண்காணிப்பிலுள்ள இந்தப் புண்ணிய பூமியிலே, முன்னூற்று முக்காலே கோடி கோயில் சாமிகள், பூசையும் ஆராதனைகளுமேற்று அருள் பாலியா நிற்கும் இந்த க்ஷேத்திர பூமியிலே, இந்தக் கோடிக்கணக்கான அருட்கண்களையும், சிஷ்ட பரிபாலன ஜோதியையும் மறக்குமளவுக்குத் திகிலும் கிலியும் ஏன் ஏற்பட வேண்டும்?

அதோ கீழ்க்கோடியை நோக்குங்கள். ஆஸ்திரேலிய விஞ்ஞானப் பேரறிவாளர்கள் என்ன செய்கிறார்கள்? வானநிலை காட்டும் தெலை

வுப் பார்வை சூக்குமக் கருவிகளையும், இயந்திரங்களையும் வைத்துக்கொண்டு ஆராய்ச்சி நடத்துகிறார்கள். "இந்த வால் நட்சத்திரம் ஏன் தென்பட்டது? இவ்வளவு அண்மையில், இவ்வளவு பெரிய அளவில் காணக் காரணமென்ன? எந்த நட்சத்திரமாவது இடம்பெயர்ந்து தாழ்ந்ததா? அல்லது பெரிய நட்சத்திரமேதாவது சிதைவுற்றுத் துண்டாகி பெயர்ந்து விழுந்ததா? இது இப்போதுள்ள இடத்திலேயே இருக்குமா? அல்லது மேலும் சிதைவுற்று பூமியில் விழுந்து நாசம் விளைவிக்குமா? நட்சத்திரம் தானா? அல்லது வெறும் ஒளிச்சிதைவா? அல்லது அணுகுண்டுபோன்ற புதிய நாசக்கருவியை யாராவது கண்டுபிடித்து சோதனை பார்க்கிறார்களா?" என்பனவே இந்த ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் கவனம் செலுத்தி அறிய முற்பட்டிருப்பது.

ஆனால் அந்த காட்சியைத் திருப்புங்கள். பாருங்கள் நம் பாரத மாதாவை. இப்போது இங்கே என்ன நடக்கின்றன? பஞ்சாங்கங்களும் பழைய ஏடுகளும் பரபரப்புடன் தேடி எடுக்கப்பட்டு ஏடு திருப்பப்படுகின்றன. சகுனம் ஆரூடம் பார்க்கப்படுகின்றன. கோயில்களிலே பூவைத்துக் கேட்கப்படுகின்றன. பல ஆசாமிகளுக்கு சாமி மருள் வந்து ஆடுகின்றனர். கம்பனடியார்கள், கம்மனாட்டாழ்வான் சொன்ன "தூமகேது புவிகெனத் தோன்றிய" என்ற பாட்டின் பொருளை அனுபவ பூர்வமாகக் காண சித்தம் செய்து கொண்டிருக்கின்றனர். பணப் பெருக்கத்திற்கேற்ற அளவு வரும்படியற்றுத் தவிக்கும் பூசாரிகளும், அர்ச்சகர்களும் ஜோசியர்களும் குறிசொல்லிகளும் சாந்தி கழிக்கும் சாமியடிகளும் வைத்தியர்களும் வயிற்றைத் தடவுகின்றனர்; "வயிறே! வயிறே! பொறு பொறு, இதோ உனக்குப் பெருங்கொள்ளை வருமானம் வந்து கொட்டப் போகிற"தென்று அந்த வயிற்றுடன் கூறியபடி- பாமரமக்களோ திகில் கொண்டு தவிக்கின்றனர். தொலைவிலுள்ள குழந்தைகள் சுற்றத்தாரை விரைந்து வந்து சேரும்படி கடிதத் தூதும் பறக்கப் பறக்க அனுப்புகின்றனர்.

இவ்விதம் விதவித விசித்திரக் காட்சிகளுக்குக் காரணமென்ன?

இந்து-வைதீக மதக்கோட்பாடின்படி; பஞ்சாங்க புராணத்தின்படி "வால் நட்சத்திரம் என்றும் கம்பர் கவியால் தூமகேது என்றும் கூறப்படுவது எங்கே தென்படுகிறதோ அங்கெல்லாம் கேடுவிளையும்" என்பது ஐதீகம். அதாவது "கொள்ளை நோய்கள் வரலாம், வெள்ளம் வந்து அடித்துக்கொண்டு போகலாம். கடல் பொங்கி ஊர்களை உண்டு ஏப்பம் விடலாம். அல்லது கலகமோ கலவரமோ மகாயுத்தமோ மூளலாம். இராஜாக்கள் சாகலாம். அல்லது இனியும் எத்தனையோ கெடுதல்கள் உண்டெ"ன்று குறிசொல்லிகள் பஞ்சாங்கங்கள் வர்ணிப்பர். பிரளய காலம் வந்துவிட்டதென்றும் புராணத் திருவாய்கள் பயங்காட்டலாம். இவற்றையெல்லாம் கண்டு பாமரமக்கள், திகில் கொண்டு பரிதவிக்காமலிருக்க முடியுமா? சாமியையும் தெய்வத்தையும் சாந்தியையும் சடங்கையும் பூசாரியையும் சகஸ்நாமார்ச்சனைகளையும் சுவர்ணபுஷ்ப காணிக்கை அர்ச்சகர்களையும் தேடாமலிருக்க முடியுமா?

ஆனால் இவ்வித பிரளயமும் பேரழிவும் நஷ்டமும், ஏடுகள் வர்ணிக்கின்றனவே யொழிய, நடைமுறையில் எப்போதாவது நிகழ்ந்ததைக் கண்டவர்களோ, அனுபவித்தவர்களோ உண்டெனக் கூறுவாரில்லை. சரித்திரச் சான்றுகளும் இருப்பதாகத் தென்படவில்லை- முதல் மகாயுத்தத்தின் முன்னரோ, இரண்டாம் மகாயுத்தத்தின் முன்போ இந்த அபாயச்சங்கு எச்சரிக்கை நட்சத்திரம் தென்பட்டதாகச் செய்தியோ கதையோ வெளியிட்டதாக எமக்கு நினைவில்லை. வேண்டுமானால் சிலர், "என் பாட்டி சொன்னாள். என் பாட்டிக்கு இவாள் சொன்னார், இவாளுக்கு அவாள் சொன்னா"ரென வால் நட்சத்திரம் போன்ற வால்கதைகள் கூறலாம். ஆனால் நுணுகி ஆராயுமிடத்து இந்த வால்கதைகள் எல்லாம், "அனுமனுக்கு ஆனையுயர வால் வளர்ந்த" கதையைப் போலத் தானிருக்கும்.

கங்கைக்கரையிலே நடக்கின்றன யாகாதி யாகங்கள்! ஹோமாதி ஹோமங்கள்! கும்பகோணத்திலே நடக்கின்றன சதகோடி அர்ச்சனைகளும், பல டன் நெய் பால் தயிர் பக்ஷண ஹோமங்களும். ஆலயங்களிலே நடக்கின்றன. கடவுளிடம் கருணை பிச்சை கோரும் பூசைகள். ஆதீனங்களிலே நடக்கின்றன, தான்யங்களை மழையாகக் கொட்டச் செய்ய, மேகராகக் குறிஞ்சிப் பாட்டுக்கச்சேரிகள். இன்னும் இது போல் கோடான கோடி பூஜை புனஸ்காரஸ்தோத்திரங்கள், கருணை பிச்சை மன்றாட்டங்கள் எல்லாம் அந்தக் கடவுளுக்குத் திருப்தி அளிக்கவில்லையா? எதற்காக, இந்த பக்தகோடிகளை அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு அந்த ஆண்டவன் இந்த அபாய எச்சரிக்கைச் சமிக்கை ஒளியை அனுப்பவேண்டும்? இந்த சாந்தி நாடகங்களெல்லாம் மெய்யல்லவென்றும் சுயநலகபட நாடகங்களெனவும் சந்தேகிக்கிறாரா? பகுத்தறிவுகொண்டு பார்க்குமிடத்து அந்தக் கடவுளென்பவர் சந்தேகிப்பதற்குமுன்னர் நமக்கே சந்தேகம் தட்டித்தான் தீரும். ஆனால் நாம் கூறப்புகுந்தது இந்த "வைதீகக் குறை புராண"மல்ல அதுவும் "பக்த மணிகள்" ஆளும் இந்த காலத்தில் நாம் இதைப்பற்றி அதிகம், புட்டுகக்காட்டப் புகுந்தால் சாமி தோஷமில்லா விட்டாலும் சட்ட தோஷமாவது நம்மை பயமுறுத்தலாம். எந்தப் பூச்சாண்டி வந்தாலும் நாம்கூறுவதென்னமோ; "எந்த நெற்றிக்கண்ணைத் திறந்து பயமுறுத்தினாலும்" பகுத்தறிவில் கண்டதுதான் மெய் மெய்யென்பதாகத் தானிருக்குமென்பது உறுதி.

இந்த வால் நட்சத்திரம் விளைவிக்கப் போகும் கஷ்ட நஷ்டங்களைப் பற்றி வருமுன் காக்கும் கவிக்கற்பனைகள் வண்டி வண்டியாக வர்ணிக்கட்டும். ஞானதிருஷ்டிகள் வாகன் வாகனை அளந்து கொட்டட்டும். போர்க்கள நெஞ்சுரத்தினரான பகுத்தறிவாளர்கள் இவற்றைக் கண்டு கலங்க வேண்டியதில்லை.

இப்போது நாம் கண்கூடாகக் காண்பது முக்கியமாக இரண்டு வால் நட்சத்திரங்களே. மக்களுக்குக் கேடுவிளைவிப்பனவும் ஆட்சியாளரைத் திணறச் செய்வனவும். இந்த இரண்டு தூமகேதுகளேயாகும். அவைகள், உணவுப்பஞ்சமும் பணப்பெருக்கமும், இந்த இரண்டு வால் நட்சத்திரங்கள் விளைவிக்கும் சகிக்க முடியாத கேடுகளிலிருந்து மீள்வதும் மீளச்செய்வதும் தான் பொதுமக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் உள்ள உடனடியான கவலையும் பொறுப்புமாகும். இவற்றை இதுவரை எந்த பஞ்சாங்கமோ பாராயணமோ, ராகாலாபனங்களோ, யாகப்புகைகளோ, தூபதீப ஆராதனைகளோ, மணியோசை, ஜாலரா முழக்கங்களோ, சாந்தி ஹோமப்புகைச்சல்களோ தீர்த்து வைத்தபாட்டைக் காணோம். இதற்கு மாறாக, முழக்கங்களும் புகைகளும் அதிகரிக்க அதிகரிக்க பஞ்சப் பரிதவிப்புகளும் அதிகரிப்பதைத்தான் கண்டும் அனுபவிக்கவும் வேண்டிய கதி ஏற்பட்டிருக்கிறது. தெய்வமும் தேவதையும் கண்திறந்து பார்த்து சிஷ்ட பரிபாலனம் செய்த பாட்டைக் காணோம். தன்கையே தனக்குதவி என்று மக்களே, மீட்சி வழி காண வேண்டித்தான் வாய்த்திருக்கிறது. "சகஸ்ரநாமஜப" கனம் ஆச்சாரியார்-நேரு சர்க்காரும் பலப்பல சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் பங்கீடு முறைகளையும் கையாண்டு கையாண்டு, இருட்டிலே திண்டாடுபவர் போல் திணற வேண்டியிருக்கிறது.

பாமர மக்களோ, "சர்க்கார் வெளியிட்ட பணம்தானே. இந்தப் பணப்பெருக்கத்தை அவர்களால் தடுக்க முடியவில்லையென்றால் இது என்ன குட்டிச்சாத்தானோ" என்றுதான் பழைய குருட்டு வைதீகப் பண்பினால் அங்கலாய்க்கின்றனர். பணநூல் நுணுக்கமறியாத குறைதான் இது. பணப்பெருக்கத்தைக் குறைக்க வரியை உயர்த்தினால், விலைவாசிகளும் உயர்ந்து இன்னும் அதிக பணம் தேவையாகுமே என்று, லோகாயதப் பண்பிலே கணக்குப் போடுகிறார்கள் சிலர். ஆடம்பரப் பொருள்களின் இறக்குமதி வரியை அதிகரிப்பதாலும் பணக்காரர்கள்தான் அதிகம் செலுத்தவேண்டியதாகுமென்பது ஆட்சியாளரின் கணிப்பு. ஆனால், பட்டுத்தேய்ந்த ஏழைகளோ, தலைக்குச் சூடேறினாலும் உடலையும் கைகால்களையும்தானே அதிகம் பாதிக்குமென்று வைத்திய நூலைப் படித்துக் காட்டுகின்றனர். கனம் ஆச்சாரியார் விதித்த

# புதுப்பெயர் புது டெல்லிக்கு "சுரேந்திர நகர்" என மாற்ற முயற்சி

——: (o) :——

இந்தியா யூனியன் தலை நகரான புதுடெல்லியின் பெயரை "சுரேந்திர நகர்" என்பதாக மாற்ற வேண்டுமென கல்கத்தா இந்திய சங்க மண்டபத்தில் 13-11-48ல் நடைபெற்ற கூட்டமொன்றில் வலியுறுத் தப்பட்டது.

'மோத்திநகர்' என்னும் புதுப்பெயர் சூட்ட வேண்டுமென்னும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரவிருக்கிறார் தோழர் தந்தாலால் அவர்கள். இது சம்மந்தமாக, புதுடெல்லிக்கு ஒரு தென் இந்தியரின் பெயரையே சூட்டியாகவேண்டும், அதுவே நியாயம், தென்னிந்தியருக்கு உரிமையும் உண்டு என்றும் அழுத்தந்திருத்தமாய் நாம் தலையங்கம் எழுதியிருந்ததை நேயர்கள் அறிவார்கள்.

சென்னையி லிருக்கும் ஒரு பிரபல ரோடுக்கு "நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு" எனப் பெயர். இன்னும் வங்காளிகளின் பெயர்கள் பல பக்கமும் சூட்டப்பட்டிருக்கின்றன. இது தென் இந்திய வாசிகளுக்கு மகிழ்ச்சி. தன் மானம் பறி போகிறதே என்ற கவலை கடுகளவும் கிடையாது. தலையில் தட்டிக் கையில் கொடுத்தாலும் தம்பிக்கு பேரானந்தம். எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடுக்கவும் தயார். ஆனால் இந்நிலை வங்காளத்தாரிடம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

**தென் இந்திய மக்களே என்ன செய்யப் போகிறீர்கள்?**

குண்டாந்தடி.

# என்ன வித்தியாசம்?

"உடுமலை பீரங்கி"

முதல் புத்தகத்தில் ஒரு சிறு பகுதி

## ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை

ஹிந்து-முஸ்லீம்-கிருஸ்தவ சகோதர, சகோதரிகளே! வித்தியாசங்களை விடுவோம். நம்மை அடிமைத் தனத்தில் ஆழ்த்தி வைத்திருந்தது இவ் வித்தியாசங்களே. பிறர் நம்மைப்பார்த்து ஏளனம் செய்வதற்குக் காரணம் இவ் வித்தியாசங்களே. நம்மைப் பிறர் அடக்கியாள முற்பட்டதற்கும் இப்போது ஆளக்காத்திருப்பதற்கும் காரணம் இவ் வித்தியாசங்களே. நாம் முற்படாமல் நாளுக்கு நாள் க்ஷீணமடைவதற்கும் இது தான் காரணம். இவ் வித்தியாசங்களை விட்டாலொழிய நாம் முற்படுவதெங்ஙனம்? விடுதலை யடைவதெங்ஙனம்? சுகவாழ்வு வாழ்வதெங்ஙனம்?

இது விஷயத்தில் வெளிநாடுகளையும் அங்குள்ள வித்தியாசங்களையும் எடுத்துக்காட்டி சமாதானம் சொல்வோரையும் எனக்குத் தெரியும். இனியும் அவ்விதமே சொல்லிக்கொண்டு வருவார்களே யானால் மற்றொன்றுமல்ல, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதுதான். அரசியலில் மாத்திரமல்ல. எத்துறையிலாயினும் சரியே இந்தியாவை இந்தியாவுடன் தான் ஒப்பிட முடியுமே தவிர மற்றெந்த தேசத்துடனும் ஒப்பிட முடியாது என்னும் உண்மையை மறுப்பவரும் உண்டோ?

ஆகவே சகல வித்தியாசங்களையும் விடுவோம். இந்தியர் என்பது ஒரு ஜாதி, இந்தியர் என்பது ஒரு மதம், இந்தியர் என்பது ஒரு சமூகம் என்பதை உலகுக்கு ரூபிப்போம். நமக்குள் எவ்வித பிளவும், மனத்தாங்கலும், மணக்கோணலும் இல்லையென்பதை பட்டவர்த்தனமாகப் பறை சாற்றுவோம். நம் ஒற்றுமையை எவராலும் கெடுக்க முடியாது என்பதைப் புட்டுப் புட்டுக் காண்பிப்போம். தூக்கத்தினின்று விழிப்போம். "பிறரால் தான் நம் ஒற்றுமை கெடுகிறது" என்று பாராயணம் செய்துவந்ததை இனியாகிலும் நிறுத்துவோம். பாருக்கு தங்குதடையின்றி உண்மையை எடுத்துரைப்போம்,

### மதங்கள்.

ஹிந்து-முஸ்லீம்-கிருஸ்துவ சகோதர சகோதரிகளே! கவனிக்கவேண்டும். ஹிந்து என்பதும் முஸ்லீம் என்பதும் கிருஸ்துவர் என்பதெல்லாம் வீண் கற்பனை. மனிதனின் கற்பனை. சீர்திருத்தமென்ற பெயரால் அழைக்கப்பட்டு, அது காலத்துக்குத் தேவையுமாயிருந்த இவைகள் இன்று கழுத்துக்குக் கத்தியாகவும் நெஞ்சுக்கு ஆணியாகவும் மாறிவிட்டன. உடன்பிறந்த சகோதரர்களுக்குள்ளாகவே ஒருவரை யொருவர் வெறுக்கிறோம். ஒருவருக்கு மற்றவர் மாறுபட்டவரென்றே கருதுகிறோம். இதென்ன கொடுமை? யாரிழைத்த தீமை? ஒவ்வொரு மதத்திற்கும் ஆதாரமாக பற்பல காவியங்கள் இருந்துதான் வருகின்றன. என்னைப் பொறுத்தவரை இவைகளெல்லாம் இருந்தும் புண்ணியமில்லை, இல்லாவிடின் நஷ்டமுமில்லை, உள்ளது நடந்தேதீரும் என்பதுதான். இதைத்தடுக்க எவரால்முடியும்! எம்மதத்தால் முடியும்? என்றும் கேட்கிறேன்.

ஏ! இந்து-முஸ்லீம்-கிருஸ்துவ சகோதர, சகோதரிகளே, உங்கள் மூவரையும் நான் ஒன்று கேட்க ஆசைப்படுகிறேன். சகோதர, சகோதரிகளே! மன்னிக்கவேண்டும். பொறுமையுங் கொள்ளவேண்டும். பொறுமை யிழந்திடின் உண்மையறிவ தெங்ஙனம்? ஆகையினால் பொறுமை கொள்ளவேண்டுமென மறுபடியும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

1. உங்களில் எவர் பெண்ணிடமல்லாமல் பிறந்தவர்?
2. உங்களில் எவர் இறக்காதவர்?
3. உங்களில் எவர் கடவுளைப் பார்த்தவர்?
4. பசி, தூக்கம், நீர், மலம், காமம் இவ்வைந்து பாதைகளிலிருந்தும் தப்பியவர் உங்களில் எவர்?
5. தேகஅமைப்பிலும், உருவத்தின் தோற்றத்திலும், உருப்புகள் எண்ணிக்கையிலும். உங்களுக்குள் வித்தியாசமென்ன?
6. அறுசுவையிலும், முக்குணங்களிலும் உங்களுக்குள் இருக்கும் வித்தியாசத்தை இன்னின்னவென்று சொல்ல முடியுமா?

என்னே மதம்? என்னே அலங்கோலம்? ஆதி மனிதனுக்கு மதமேது? சாமியேது? பூதமேது? ஆணுக்குப் பெண், பெண்ணுக்கு ஆண் என்ற முறையை விடவும் வேறென்ன இருந்திருக்கமுடியும்?

எல்லா பாதைகளையும், மனிதன் தானே தணித்துக்கொள்ளலாம். ஆனால் காமத்தின் பாதை ஏற்படுங் காலத்திலோ மற்றொருவரின் கூட்டுறவும் சேர்க்கையும் இருந்தே தீரவேண்டும். இதனால்பல அட்டூழியங்களும் நடந்திருக்கவேண்டுமென்பது எவரும் ஒத்துக்கொள்ள வேண்டியதேயாகும். எக்காலத்தும் ஆண்களே தேக பலத்தில் மிக்கோராவர். தைரியமும் துணிவும் படைத்தவருமாவர். இவ் வசதியைப் பயன்படுத்தி, ஆண்கள் பெண்களைக்கைக்கொள்ள பல்வேறு முறைகளையும் மேற்கொள்ளலாயினர். பெண்களைக் கைக் கொள்ள இதுதான் வழி, இது தான் முறை, இதுதான் சரி என்பதொன்றுமில்லாமல், வேண்டியது பெண், எப்படியானாலும் கைக் கொள்வதே சரி என்ற முறையைத் தவிர ஒரு கட்டு திட்டமிருந்ததாகச் சொல்வதற்கேயில்லை. உதாரணமாகவே எடுத்துக்கொள்வோம். ஹிந்து மதப்படியுள்ள எட்டுவித கல்யாணங்களும் ஒருவர் ஏற்படுத்தியதல்ல. ஆனால் அன்றிருந்த ஆண்மக்கள் பெண்களைக் கொள்ளும் முறைகளை ஆராய்ந்து அவைகள் எட்டுவிதமாகுமெனப் பிரித்து இன்னின்ன விதம் ஒத்துக் கொள்ளக் கூடியது இன்னின்ன விதம் ஒத்துக்கொள்ளக்கூடாதது என்றும் பாகுபாடுசெய்து, முறையை அனுசரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயரும் சூட்டலாயினர். ஒவ்வொரு பெயரும் காரணார்த்தமாகவே ஏற்பட்டிருப்பதையும் கவனிக்க வேண்டும். இவைகளை பிற பின் விரிவாகக் கவனிப்போம்.

---

வால்.........

பொது விற்பனை வரியையும் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த வரி செலுத்துபவர்கள் வியாபாரிகள். ஆனால் வசூலிப்பதோ ஏழைப் பொது மக்களிடம் தானென்ற உண்மையை அறியாதவர்கள்யார்? எனவே ஆடம்பர தர்பார் பணக்காரர்கள் பையில் கைவைத்தால் அவர்கள் தங்களிடம் அடிமை வேலைசெய்யும், அல்லது தங்கள் "அபய ஹஸ்தத்தை" எதிர் பார்த்துக் கிடக்கும் ஏழைகளின் வயிற்றில்தானே கைவைப்பார்கள்? உற்பத்தியை அதிகரிக்க வழி ஏற்படாதபோது எந்த இறக்குமதியையும் குறைத்தாலும் சாமான்கள் பஞ்சம், பண்டம் பற்றாக்குறை அதிகரிக்குமே என்று தர்க்க ரீதியில் கேட்கத்தான் தூண்டுகிறது. ஆட்சி முகாமிகள் பேரறிவாளர்கள் என்பதை யாரும் மறுக்கவில்லை. அவர்கள் திறமையிலோ, அறிவாற்றலிலோ நாம் குறைகூறவில்லை. நாம் எந்த அரசியல் கட்சியிலும் கொடி தூக்கியோ, ஒலிபெருக்கியோ அல்லவென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். எக்கட்சியாண்டாலும் நமக்குக் கவலையோ கண்ணெரிச்சலோ கிடையாது. **நாம் வேண்டுவதும் விரும்புவது மெல்லாம் பாமரமக்கள் பசியாரவுண்டு மன மகிழ்ந்து வாழவேண்டு மென்பதே யாகும்.** எனவே இந்தப் பணப் பெருக்கத்தையும் பண்டப் பஞ்சத்தையும் ஒழிக்க வேண்டுமானால் ஏராளமான சாமான்கள் கிடைக்கச் செய்து, விலைவாசிகள் இறங்கும்படி செய்யவேண்டும். அல்லது, சர்க்காரே தமது நஷ்டக்கணக்கிலாயினும் விலைவாசிகளை பெரிய அளவுக்குக் குறைக்க வேண்டும். இதனால் சர்க்காருக்குப் பெருநஷ்ட மேற்படுமே என்று கேட்கலாம். ஏற்படாது. ஒருக்காலும் ஏற்படாதென்று நாம் துணிந்துகூறுகிறோம். விலைவாசிகளிறங்கினால் சிப்பந்திகளின் சம்பளங்களையும் மற்ற சாமான் செலவினங்களையும் குறைக்க வழியேற்படுமல்லவா? விலைவாசிக்கேற்றபடி சம்பளத்தை ஏற்றியதுபோன்றே குறைப்பதை நேர்மையாளர் - படித்த அறிவாளர்கள் யாரும் எதிர்க்க மாட்டார்கள் என்பது உறுதி. இதேபோல் விலைவாசிகள் இறங்கினால் பொது ஜனங்களும், மிச்சமாகும் பணத்தை குழிதோண்டி புதைத்து வைக்கப் போவதில்லை. தங்கம் வெள்ளி விலையிறங்கினால் நகைகள் தட்டிப்போட்டுக் கொள்வார்கள். அல்லது இப்போது பொதுஜன பாங்கிகளில் நம்பிக்கைக் கெட்டு விட்டதால் கட்டாயமாக சர்க்கார் சேவிங்ஸ் பாங்கிகளிலோ, பாண்டுகளிலோதான் பணத்தைப் போடுவார்கள். நகைகளாக்க முடியாததால் தான் மக்கள், பணத்தை மற்ற பொருள்களில் விரயமாக்குகின்றனர். நகைகள் செய்ய வசதிப் பட்டால் மற்ற பண்டங்களுக்குக் கிராக்கியும் தணியும். பணநடமாட்டமும் குறையும்; வெளிநாட்டு ஆடம்பரப் பொருள்கள்தேவையும் குறையும். இறக்குமதி குறையும். டாலர் செலவினமும் குறையும்.

நகைகளோ, கட்டிட சாமான்களோ விற்றுப் பணம்குவிக்கும் வியாபாரிகளும் அளவுக்கு மீறி தூங்கிக் கொண்டிருக்கும் பணத்தை சர்க்கார் பாண்டுகளிலும் பாங்கிகளிலும் அடைக்கலமாக ஒப்புவித்துத்தான் தீரவேண்டியதாகும். அல்லது வருமானவரிக்குப் பயந்து புதைத்து வைக்கலாம். அதனாலும் பணநடமாட்டம் குறையலாம். எனவே, ஒன்று. சாமான்களை, ஏராளமாக செய்து தள்ள விரைவாக ஏற்பாடு செய்ய வேண்டும். அல்லது கடும்நோயாளி, கண்ணையும் மூக்கையும் மூடிக் கொண்டு கசப்பு மருந்தை விழுங்குவது போல், விலைவாசிகளைக் குறைக்கவேண்டும். இது பொது ஜனங்களின் பொதுவான அபிப்பிராயம் என்பதையும் ஆட்சியாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். ஆட்சியாளரின் ஆற்றலைக்குறைத்து மதிக்கும் பண்

(3-ம் பக்கம் பார்க்கவும்)


வெளி வந்துவிட்டது

சிறந்த சரித்திர ஆராய்ச்சி நூல்

"பிவியார்"

**"உலகம் கண்ட திராவிடம்"**

விலை அணா 4.

அச்சில்:—

காதலர் பாதையில்...?

(உள்ளம் கவரும் காதல் நவீனம்)

"நிலவு" அலுவலகம்.

9. மைலை ரங்கநாத முதலித்தெரு,

தியாகராய நகர்

சென்னை, 17

# "புகார்" காண்டம்

குறிப்பு :— நாம் சொல்வதல்ல, பிரமுர்கவின் கருத்தும் வாய்ச்சொல்லுமேயாகும். உண்மையை பொதுமக்களும் ஆட்சியாளருமுணர்ந்து தகுந்த முறையில் நடந்துகொள்ளவேண்டுமென்ற நன்னோக்கத்தின்மீதே இது தொகுத்து வெளியிடப்படுகிறது. (ஆ - ர்)

### பண்டித நேரு

இந்நாட்டில் பொதுவுடமைக் கட்சியார் மேற்கொண்ட நடவடிக்கைகள் தவறானதாகும், இப்போது நாட்டு நடப்புகள் ஏறக்குறைய பொதுவுடமைவாதிகளின் கருத்துக்குச் சார்பாகவே ஏறக்குறைய நடந்துவரும்போது அவர்கள் கிளர்ச்சிப் போக்கை ஏன் கொள்ளவேண்டும். இதற்குக் காரணம் என்ன? ஒன்று இந்நாட்டில், கம்யூனிஸ்ட்டு தலைமை நிர்வாகிகளுக்கு அனுபவம் இல்லாதிருக்கலாம். அவர்கள் இந்நாட்டின் குறிக்கோள் நிலைமையை அறிந்துகொள்ளும் அளவுக்கு அறிவு பெறாமலிருக்கலாம். அல்லது இந்நாட்டு நிலைமையை உணராத அந்நிய நாட்டில் உள்ள, யாரோ ஒருவர் கண்மூடித்தனமாக இடும் கட்டளைகளின்படி இவர்களும் கண்மூடித் தனமாக நடப்பதாக இருக்கலாம்.

• • • • •

### தென்னாப்பிரிக்கா மாஜி மந்திரி ஜெனரல் ஸ்மட்ஸ்

மலான் சர்க்கார் ஆப்ரிக்க மக்கள்மீது விதிக்கும் தடைகளால் தென்னாப்பிரிக்காவின் பொருளாதார நிலைமையே அஞ்சும்படி நொடிந்து வருகிறது. இத்தடைகளைக்கண்டு, வெளிநாட்டு மக்கள் திகைப்புறுகின்றனர்.

• • • • •

### தென்னாப்பிரிக்கப் பிரதமர் மலான்

ஜெனரல் ஸ்மட்ஸ் ஐக்ய நாடுகள் சபையிலுள்ள தென்னாப்பிரிக்கத் தூது கோஷ்டியினருக்கு நேர் விரோதமான செய்கையிலீடுபட்டிருக்கிறார்- தென்னாப்பிரிக்க யூனியனின் வெளிநாட்டுக் கொள்கையையேபாழ்படுத்திவருகிறார்.

• • • • •

### மதுரை நகரசபை

மதுரை நகரில் மீண்டும் தான்யப் பங்கீடு முறையை சர்க்கார் புகுத்துவதை இச் சபை விரும்பவில்லை. இப்போதைய தேவையை, நிவாரணக்கடைகளைத் திறம்பட நடத்துவதினாலும், சில்லரை விலைகளை நிர்ணயிப்பதாலும், நல்ல முறையில் சரிகட்டலாம்.

• • • • •

### ஐ. நா. சபையில் தென்னாப்பிரிக்கப் பிரதிநிதி எரிக்லூ

சமூக வேற்றுமைகள் தலைவிரித்தாடும் இந்தியாவின்பிரதிநிதி, அரசியல் கூட்டத்தில் தென்னாப்பிரிக்கா பற்றி பேசத்துணிவது, ஆச்சரியத்தையுண்டு பண்ணுகிறது.

இந்தியாவிலுள்ள சாதி வேறுபாடுகளுக்கு முடிவுகட்ட இந்திய சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டதாகக் கூறப்பட்டபோதிலும்கூட நிலைமை முன்போலத்தானிருக்கிறது.

• • • • •

### ஸர். சி. வி. ராமன்

உலக மக்கள் எண்ணிக்கையில், பாதிப்பேர், ஆங்கில மொழி பேசுகின்றனர். இந்தியா, விஞ்ஞானம் முதலிய எல்லா அறிவுகளையும் ஆங்கில மொழி மூலம்தான் பெற்று வளர்ந்திருக்கிறது. இந்தியா ஆங்கிலத்திலிருந்து தன்னைத் துண்டித்துக்கொள்வதால், சர்வதேச கலாச்சாரத்திலிருந்தும், நாகரிகத்திலிருந்தும், துண்டித்துக்கொண்டதாக முடியும். மொழிவாரி மாகாணப் பிரிவினையானது; நாட்டின் ஐக்கியத்திற்கும், இந்தியைத் தேசிய மொழியாக்குவதற்கும் பொருந்தாததாகும். ஆங்கிலம் இந்தியாவை ஐக்கியப்படுத்துவதோடு மாத்திரமல்லாமல் உலக நாடுகளின் தொடர்பையும்,நல்ல முறையில் வளர்ச்சியுறச்செய்யும்.

• • • • •

### இந்திய சர்க்கார்

ஆர். எஸ். எஸ். காரர்களைப் பற்றி பல மாகாண சர்க்கார்களிடமிருந்து கிடைத்துள்ள தகவல்களை கவனிக்குமிடத்து. ஆர். எஸ். எஸ். காரர்கள் நடத்திவரும்நடவடிக்கைகள் நாட்டுக்கு கேடுவிளைவிப்பனவாகவும்,அழிவுவேலையும் பலாத்காரப்போக்கு. கொண்டவையாகவும், இருப்பதாகத் தெரியவருகிறது. எனவே, ஆர். எஸ். எஸ், மீது விதித்துள்ள தடையை நீக்குவதற்கில்லை.

• • • • •

### சென்னை ரெட்டி, பலிஜ இளைஞர் மாநாடு

வகுப்புவாரி பிரதிநிதி தலைமுறை இப்போதைய நிலைமையில் பிற்போக்கு வகுப்பார்களுக்குப் போதிய அளவு பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள மக்களின் எண்ணிக்கை விகிதாசாரப்படி உத்தியோகப் பங்கீடும் தரப்படவேண்டும். தற்போதைய முறை மாற்றப்படவேண்டும்.

• • • • •

### பெண் பள்ளியில் கல்விமந்திரி அவினாசிலிங்கம்

காந்தியார் கொலைவழக்குப் போன்ற செய்திகள் பள்ளிக்கூடங்களில் எழுதலாகாது அது போன்ற செய்திகள் குழந்தைகளுக்கும் கூடாது. அவைகளை பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்குத் தெரிவிப்பது தவறானது. மகாத்மா கொலைசெய்யப்பட்டார் என்பதையே குழந்தைகள் மறந்துவிட வேண்டும்.

• • • • •

### ஐ. நா. சபையில் சீன பிரதிநிதி

மஞ்சூரியாவில் பொதுவுடமைக்காரர்கள் போர் நடத்துவதை ரஷ்யா ஆதரிக்கிறது. சமாதானத்தையோ அமைதியையோ ரஷ்யா விரும்பவில்லை ஒரு நாடு மற்றொரு நாட்டில் ஐந்தாம் படை வேலைசெய்யும்வரை உலகில் அமைதியை நிலைநாட்டமுடியாது.

### பம்பாயில் சர்தார் பட்டேல்

கன்ட்ரோல்களை நீக்கியதால் கொள்ளைலாபக்காரர்கள் கையில் ஏராளப் பணம் ஏறியது. அவர்களில் பலர் வருமானவரிகூட செலுத்தவில்லை. வரிசெலுத்தப் பயந்து பணத்தைப் பதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். விலைவாசிகளோ உயர்ந்து கொண்டே போகிறது. சீனா, மலாய், பர்மா நாடுகளில் நடப்பவை நம் நாட்டிலும் ஏற்படுமானால் நாம் சுயராஜ்யம் பெற்றது வீணாகும்.

• • • • •

### கோவை ஜி. டி. நாயுடு

இந்திய வர்த்தக சம்மேளனத்தலைவரான லால்ஜி மொராத்ராவுக்கும் சங்க உறுப்பினர் அக்ரவாலாவுக்கும் கோவை திரு. ஜி. டி. நாயுடு தானளித்த தேநீர் விருந்தின்போது, பேசியதில் குறிப்பிட்டதாவது :—

இந்திய சர்க்காரை நடத்தும் தலைவர்கள் வித்யாசமின்றிகாரியங்களை நடத்திவந்தாலும் தென்னிந்தியாவின் நலன்களை மறந்துவிடுகிறார்கள். சர்க்காரை திறமையாகநடத்துவதற்காவது மொழிவாரியாக மாகாணங்களை பிரித்தாக வேண்டும். வெளி நாடுகளிலிருந்து கைத்தொழில் சாமான்களை இறக்குமதி செய்ய லைசன்ஸ் கொடுப்பதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரத்தை அல்லது லைசென்ஸ் கொடுக்க சிபார்சு செய்யும் அதிகாரத்தை இந்தியவர்த்தக சம்மேளனத்திற்குத் தந்தால் எவ்வித குறைபாட்டிற்கும் இடமிருக்காது.

---

சிறுவர் பகுதி

# மதுவினால் ஞானம் துறந்த சன்யாசி

எம். ராஜாராம்

ஓர் ஊரில் சன்யாசி ஒருவர் இருந்தார். அவர் தங்கி இருந்த கிராமத்திற்கு அருகில் ஒரு ஆஸ்ரமம் ஏற்படுத்திக் கொண்டு அதில் கடவுளை நோக்கி தவம் செய்துகொண்டு வசித்து இருந்தார். அவருக்கு கிராமத்திற்கு அருகாமையில் இருப்பதால் சிற்சில சமயங்களில் அவர் செய்யும் யாகத்திற்கு பலகாரணங்களால் தடை ஏற்படுகிறது என்று எண்ணி இந்த இடத்தைவிட்டு வேறு எங்கேயாவது தனிமையாக இருந்து தவம் செய்யலாம் என்று புறப்பட்டார். அவ்வாறு சிற்சில கிராமங்களையும் பரந்த காடுகளையும் நடந்து சென்றுகொண்டு இருக்கும் பொழுது காட்டில் ஒரு குடிசையைக் கண்டார். அதை நோக்கி சென்றார். அவருக்கு மிகுந்த களைப்பு ஏற்பட்டு அங்கே உட்கார்ந்தார். அதுசமயம் அந்த குடிசையில் இருந்த ஒரு அழகான பெண் வெளியில் வந்தாள். அவர் அதை கொஞ்சமும்கூட யார் என்றுகருதாமல் 'நாம் எல்லாம் துறந்த சன்யாசி நாம் ஏன் இந்தப் பெண்ணை பார்க்கவேண்டும்' என்று நினைத்தார். பிறகு உற்றுநோக்கி பார்க்க எதிரில், ஓர் பனைமரம் இருக்கக்கண்டால் சில மொந்தைகள் அப்பனைமரத்தின் பாளைகளில் கட்டி அதிலிருந்து மதுபானம் இறக்குவதை கண்டான். அந்த குடிசையிலிருந்து வெளிவந்த ஒருவன் சுவற்றில் மாட்டி இருந்த கத்தியை எடுத்துக்கொண்டு சிலகயிறுகளுடன் பனைமரத்தின் அருகாமையில் வந்து மார்களிலும், கால்களிலும் கயிறுகளை மாட்டிக்கொண்டு பனைமரத்தின் மேலேறி மொந்தைகளிலிருந்த மதுவை எடுத்துக்கொண்டு தன்கையிலிருந்த கத்தியால் மரத்தின்பாளைகளை மறுபடியும் அறுத்து மொந்தைகளை அதில்கட்டிவிட்டு கீழேஇறங்கி தன் குடிசையை நோக்கிவந்தான். குடிசைக்குவெளியில் ஒருபானைவைத்திருந்தது. அதில் தான் கொண்டுவந்த மதுவை கொட்டினான். அப்போது சந்நாசி மது இறக்கியை நோக்கி 'ஐயா; எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது கொஞ்சம் குடிக்க ஜலம் கொடுங்கள்' என்றுகேட்டார். அவன் குடிசையிலிருந்து ஒருகுடுவை நிரம்பமதுவை கொண்டுவந்துசன்யாசியிடம்கொடுத்துவிட்டு தன்வேலைக்கு போய்விட்டான். இவர் இருந்தகளைப்பில் மதுவென்றும் தண்ணீர் என்றும் கவனிக்காமல் அதை குடித்துவிட்டார். கடவுள் தியானத்தையே சதா மனதில் கொண்ட சன்யாசி அவன் கொடுத்த மதுவை குடித்தபிறகு அவருக்கு மயக்கம் ஏற்பட்டது தன் சுயவுணர் விழந்தார். தவயோகமும் ஞானமும் பகுத்தறிவும் பறந்தன. அண்டையில் நின்ற பெண்ணின் மேல் முற்றும் துறந்த சன்யாசி காதல் கொள்ள ஆரம்பித்தான். அவளிடம் தகாதமுறையில் நடக்கலானார். கூக்குரலிட்டாளவள் ஆண்களெல்லாம் ஓடிவந்தனர் சன்யாசியை அடிஅடியென்றடித்து விரட்டினார்கள். படுகாயமடைந்த சன்யாசி ஆற்றங்கரையில் நாற்றச் சேற்றிலே வீசி எறியப்பட்டார், பிறகு குடிமயக்கம் தெளிந்து தான் செய்த அடாதசெயலை சிந்தித்துப் பார்த்துப் பலவாறு துக்கப்பட்டார். முற்றும் துறந்த சன்யாசி தன் தாகத்தை தீர்ப்பதற்கா தண்ணீர் என்றும் மது என்றும் நினையாமல் குடித்துவிட்ட பிறகு தகாதசெயல் செய்யலானார் ஆகையால் இந்த குடி-யானது ஒழிந்தது உலகிற்குப் பெரிய கண்யாகும். மதுகுடிப்பதால் நல்லவர்கள் எல்லோரும் கெட்டவழியில் ஈடுபடச் செய்யும் மது ஒழிக.

### சென்னை தொழிற்சாலை சட்டம் அமல்

சென்னை நவ 9—சென்னை 1947ம் வருஷத்திய மின்சார வசதியில்லாத தொழிற்சாலைச் சட்டத்தின் 1-வது ஷரத்து தவிர மற்ற ஷரத்துகள் பூராவும் 1949 ஜனவரி 1உ முதல் அமுலுக்கு வரும் என்று உத்தரவிட்டிருக்கின்றனர். 1-வது ஷரத்து ஏற்கனவே அமுலுக்கு வந்துவிட்டது.

டெலிபோன் : 86720.

நியூடன் அண்டு கம்பெனி,

80, வாலாஜா ரோடு, மௌன்ட் ரோடு,

சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும், ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

தொடர் கதை

# லக்ஷம் ரூபாய் நக்ஷத்திரம்

——: (o) :——

[முன்வாரத் தொடர்ச்சி]

[ "பிவியார்" ]

"மறந்துபோக அதுக்குப் புத்தி எங்கே போச்சு? வெச்ச இடம் இங்கே ளாருக்குத்தெரியும். அதையே வந்து எடுத்துப்போகச்சொல்" என்று இடி முழக்கக் குரல்கேட்டு, காமாட்சிநாதன் திடுக்குற்றுத் தலைநிமிர்ந்து பார்த்தான். பேச்சுத்தோரணையால் அதுதான் தாசில்தாரின் மனைவியென்று யூகித்துக்கொண்டான். தாயும் மகளும் உருவத்திலே, அமைப்பிலே ஒரேஅச்சுதான். எனவே அந்தச்சிறுபெண் தாசில்தாரின் மகளென்றும் உணர்ந்துகொண்டான், பெரியம்மாளைக்கண்டதும் அவனுக்கு ஏனோ ஒருவித நடுக்கமெடுத்து 'பேச்சு வாயைவிட்டு வெளியில் வர மறுத்தது. இயந்திரம்போல் ஒருகும்பிடு போட்டுவிட்டுத்திரும்பி, வெளிமுற்றத்தில் நான்கு ஐந்தடி எடுத்து வைத்தான்.

"அடேபையா! இந்தா. அய்யாவிடம் போய், சாயந்திரம் வரும்போது சர்க்கரையும் காப்பித்தூளும் மறக்காமல்வாங்கி வரச்சொல். மறந்தால் காப்பி கூப்பாடாகிவிடுமென்று எச்சரிக்கை நோட்டிஸ்அனுப்பியதாகவும் தெரிவி. தெரிந்ததா? உங்கள் ஆணினத்துக்குள்ள விளையாட்டுப் புத்தியாலும், மெய் மறதியாலும், நான் சொன்னதை அய்யாவிடம் சொல்லாமல் மறந்தையோ, தெரியுமல்ல? "டிஸ்மிஸ் நோட்டிஸ்" காலைகாலை பத்துமணிக்கு உனக்கு சாதரா ஆகிவிடும். ஜாக்கிரதை போ" என்று மிரட்டி அனுப்பிவைத்தாள்.

மாலையில் தாசில்தாரய்யா, அம்மாளவர்கள் சொல்லியனுப்பிய சாமான்களுடன்' அவளுக்குப் பிரியமான பாதம் அல்வா இரண்டுசேருடன் வந்து சேர்ந்தார். காப்பிக் கோப்பையும் ஐயாவின் கைக்கு வந்தது,

அம்மாள் அல்வாவை ருசிபார்த்துக் கொண்டிருக்கும்போது, ஐயா, காமாட்சிநாதனைப்பற்றி அவளுடைய காதில் புயபக்தியோடு ஓதினர்.

அதைக்கேட்டதும் அம்மாள் "சே இவனு? என்னமோ வெண்டக்காயிக்கு கையும் காலும் முளைச்சது போலிருக்கானே? இவனுக்கும் நம்ம பெண்ணுக்கும், எணியேற்ற மாகவல்லவாவிருக்கும்?" என்றலட்சியமாகப் பதிலளித்தாள்.

தாசில்தாரும் அடக்கவொடுக்க பல் காட்டுதலுடன் "பெண்ணைக்கேட்டுப் பாறேன்" என்றார்.

அம்மாள் :- "பெண்ணை என்ன கேட்பது? அவளுக்கு இன்னும் விளையாட்டு வயசுதானே! இவனைக்கட்டிவைச்சால் விளையாட நல்ல பொம்மை கிடைச்சுது என்றுதான் நினைப்பாள். பிறகல்லவா லாப நஷ்டக் கணக்குப் பார்ப்பதெல்லாம்?

தாசில் :—அப்படியானல், இந்தப் பையன் வேண்டாமென சொல்றயா? நம்ம பாப்பாவுக்கோ, வயசாச்சு. நல்ல பிடித்தமான பையன்களோ கிடைப்பது கஷ்டமாயிருக்கே?

அம்மாள் :— வேண்டாமென சொல்லலே. பாப்பாளுக்கு பிடிக்குதான்னு கொஞ்ச நாள் "டெஸ்ட்" பார்க்கலாம். அப்புறம் முடிவு கட்டலாம்"

இந்த உத்தரவின்படியே, 'டெஸ்ட்' நடத்தப்பட்டது. அம்மாளும் மகளும் செய்த சோதனைகளில் காமாட்சிநாதன் குரங்கின் கை பூமாலைபோலத்தான் திண்டாடினன். சௌந்தரம்மாளுக்குத் துணையாய் ஊரூராய் சுற்றினன்,

இரவுப்பகலாய், போகாத சினிமா வில்லை; பார்க்காத நாடகமில்லை. காணாத காட்சியில்லை. அந்தத் தூக்குத் தூக்கி வேலையிலே அவன், உடல்நலிவுற்றது. நோய்பட்டு, பிழைத்ததே தம்பிரான் புண்ணியமென்றாகி விட்டது. இதனால் தாசில்தார் மாத்திரமன்றி தாசில்தாரம்மாளும்கூட, 'ஐயையோ' இந்தப்பையனால் நமக்கு அவப்பெயர் வந்துவிடப்போகிறதே.' என்று துடிதுடித்து, வைத்திய செலவுக்காகத் தன், உயிர்போன்ற நகைநட்டுகளையும் விற்க முன்னடைந்தாளென்றால், நோயின் கொடுமை எப்படியிருக்குமென்று சொல்லத் தேவையில்லை, பிறருக்கு எச்சில் பருக்கையும் காட்டாத அம்மாள், வைத்தியருக்கு இரண்டாயிரம் ரூபாய்களை அள்ளிவீசினரென்றாள் அவள் கொண்ட திகிலும் கலக்கமும் எவ்வளவிருக்கும்?

எனவே, இந்தக்கல்யாண ஏற்பாட்டைக், காதும் காதும் வைத்ததுபோல், காமாட்சிநாதனுக்கு மேலும் ஓராயிரம் கொடுத்ததுடன், ரத்துசெய்து விட்டனர். ஆனல் இந்த'டெஸ்ட்' திருவிளையாடலை ஊரார் அறியாமலிருக்க முடியுமா? வெகு விரைவில் இந்தச்செய்தி புதிய சினிமா காட்சிபோல் பரவி விட்டது. தாசில்தார் குடும்பம் வெளியில் தலைகாட்டமுடியாதபடி ஊரார் 'தமாஷ் நாடகம்,' நடத்தலாயினர். எனவே தாசில்தாரும், நெடுநாள் ரஜா எடுத்துக் கொண்டு ஊரை விட்டே வேறூருக்கு மாற்றிக்கொண்டார்.

தாசில்தார் மகளான சௌந்தரம்மாளுக்கும் காமாட்சிநாதன்மீது ஏதோ ஒருவகை பற்றுதலும் அனுதாபமுமேற்பட்டது. எனவே தன் தகப்பனாரிடம் சொல்லி, அவனுக்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வேலை கிடைக்கும்படி செய்தாள்.

இந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வேலையின்மீது, கிராமங்களுக்குச் சென்றுவந்தபோதுதான் காமாட்சிநாதன், தங்கம்மாளை சந்தித்தான்.

இருவரும் சந்தித்ததும், கதையில் வரும் நிகழ்ச்சிபோலத்தான். இருவரும் முதல்முதல் சந்தித்து, கோடை வெய்யிலில் நடுப்பகலில், தங்கம்மாள் வீட்டின் முன் முற்றத்தில். கிராமாந்திரங்களில் "கோஷா" வழக்கமும் ஒளிபும் மரியாதையுமில்லையல்லவா? தங்கம்மாள் அப்போது மாடுகளுக்குத் தண்ணீர் வைத்துக்கொண்டிருந்தாள்.

காமாட்சிநாதன், வெய்யில் கொடுமையுடன் பசிக்கொடுமையும் வாட்ட, அலுத்து மயங்கி, அந்தவீட்டுத் திண்ணையில் வந்தமர்ந்தான்.

அப்போது தங்கம்மாளின் தாய், தன் புருஷனுக்கு கஞ்சி எடுத்துக்கொண்டு போயிருந்தாள் பக்கத்துத் தோட்டத்திற்கு. திண்ணையில் வந்தமர்ந்தவர்களை "யார் நீ" என்று மிரட்டுவதும் "எழுந்துபோ" என்று உத்தரவு போடுவதும் பசியோடு ஒருவர்வீடு தேடிவந்து திண்ணையில் உட்கார்ந்திருக்கையில் அவரை உபசரிக்காத கஞ்சக்குணமும் பட்டணவாசிகளைப் பொறுத்த மட்டில்தானே!

கிராமவாசிகளோ, முக்கியமாக ஏழைப் பாட்டாளி குடும்பத்தார்; தன் வீடுதேடி வந்தவருக்கு குடிக்க மோராவது தந்து உபசரிக்காமலிருக்க மாட்டார்கள். வந்தவர்களை, "வாங்க, ஐயா! உக்காருங்கோ." என்று உபசரிக்காமல் இருக்க அவர்களால் இயலவே இயலாது.

(தொடரும்)

## வார விசேஷம்?

### பிரிட்டனுக்கு புது அரசர்?

லண்டன். நவ 14—பிரிட்டிஷ் மகுடத்துக்கு வாரிசான 22 வயதுள்ள இளவரசி எலிசபெத்துக்கு ஞாயிறு இரவு லண்டன் நேரம் 9-14 மணிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது தாயும் குழந்தையும் சௌக்கியம். பிரசவம் நான்கு டாக்டர்கள் முன்னிலையில் நடந்தது பிரசவத்தை எதிர் நோக்கி சுமார் 3000 பேர் அரண்மனைமுன் கூடியிருந்தனர் ஒரு மணி நேரத்துக்குப் பின்னர்தான் நிருபர்களுக்கும் மக்களுக்கும் விஷயம் அறிவிக்கப் பட்டது.

உடனே மக்கள் ஆரவாரம் செய்தனர் 'பிலிப்பை பார்க்கவேண்டும்' என்று மக்கள் கோஷித்தனர் அதாவது பிறந்த குழந்தையின் தகப்பனரான எடின்பரோ கோமகனைப் பார்க்க வேண்டு மென்று கோஷித்தனர்.

பிறந்த குழந்தை ராணிக்குத்தான் பிறந்தது என்பதை ஊர்ஜிதம் செய்வதற்காக பிரசவ அறைக்குள் உள்நாட்டு மந்திரி இருக்கவேண்டுமென்ற வழக்கம் ரொம்ப நாளாக இருந்து வந்தது. ஆனல் இது மன்னருக்கும் உள் நாட்டு மந்திரிக்கும் பிடிக்கவில்லை யாதலால் சமீபத்தில் இவ்வழக்கத்தை மன்னர் ரத்து செய்தது ஞாபகமிருக்கும்.

இங்கிலாந்தை இரண்டாவது ஜேம்ஸ் அரசாண்ட காலத்தில் அவர் கதோலிக்க மதத்தை புகுத்த விரும்புகிறார் என்று சந்தேகித்த மக்கள் அவருக்கு குழந்தை பிறந்த போது அது ராணிக்குப் பிறந்த குழந்தை அல்லவென்றும் யாரோ வேறு ஒருவர் குழந்தையை திருட்டுத்தனமாக கொண்டுவந்துவைத்து விட்டார்கள் என்றும் ஒரு வதந்தி கிளப்பி விடப்பட்டது. அதன் பலனாகத்தான் பிரசவ அறையில் மந்திரி இருக்கும் வழக்கம் வந்தது.

பிரசவ சமயத்தில் ராஜாவும் ராணியும் அறைக்கு முன் பக்கம் இருந்தார்கள். எடின்பரோ கோமகன் வெளியே போயிருந்தவர் பிறகு வந்தார். குழந்தையை வாழ்த்தி அங்கு கூடியிருந்த ராஜ குடும்பத்தினர் மது அருந்தினர்.

வின்சர் கோமகனுக்கு பிறகு பிரிட்டிஷ் சிம்மாசனத்திற்கு நேரடி வாரிசாக பிறக்கும் முதல் குழந்தை எலிசபெத்துக்குப் பிறந்த குழந்தைதான் இளவரசி எலிசபெத் பட்டத்துக்கு வந்த பிறகு இப்போது பிறந்த குழந்தை வேல்ஸ் இளவரசர் என்ற பட்டம் சூடும்.

1926–ம் வருஷம் ஏப்ரல் 21–ந் தேதி எலிசபெத் இளவரசி பிறந்தாள். இவருடைய கணவன் கிரீஸ் இளவரசர் பிரிட்டிஷ் பிரஜையானர். இந்த தம்பதிகள் 1939–ம் வருஷம் சந்தித்து காதல் கொண்டனர். இவர்களுக்கு திருமணம் நடந்தது. கல்யாணம் ஆகி 11 மாதங்கள் 26 நாட்களுக்குப் பின்னர் குழந்தை பிறந்திருக்கிறது.

இங்கிலாந்தில் பிறந்த பட்டத்திளவரசர்களில் இக்குழந்தை 42-வது ஆகும் 1066 நார்மன்கள் இங்கிலாந்து மீது படையெடுத்த பின்னர் இங்கிலாந்தில் முடி சூடும் 36-வது மன்னனாக இக்குழந்தை இருக்கும்.

——: (x) :——

### ரயிலில் புதிய 'பாஸ்' விதிகள்

### 1949 ஆம் ஜனவரி 1௳ முதல் அமலுக்கு வரும்.

1949-வது வருஷம் ஜனவரி முதல் தேதி முதற்கொண்டு ரயில்வேக்களில் நான்கு வகுப்புக்களிலிருந்து மூன்று வகுப்புக்களாகக் குறைக்கப்படுவதால் மேல் வகுப்புகளில் நெருக்கடியைத் தவிர்க்க ரயில்வே சிப்பந்திகளின் இலவச டிக்கட் பிரயாண வசதிகளும் மற்றும் "பாஸ்" வைத்திருப்பவர்களின் பிரயாண வசதிகளும் மாற்றப் பட்டிருக்கின்றன.

இதன் பிரகாரம் கெஜட் பதவியுள்ள உத்தியோகஸ்தர்களே மேல் வகுப்பிலும் ரூ 225-க்கு மேல் மாதச் சம்பளம் பெறுகிறவர்கள் இண்டர் வகுப்புக்களிலும் மற்றவர்கள் சாதாரண வகுப்புக்களிலும் "பாஸ்கள்" பெற்று பிரயாணம் செய்யலாம்.

——: (x) :——

### நகர சபை என்ஜினீயர் தோழர் மீரானுக்கு உபசரிப்பு

சென்னை நவ 15— கார்ப்பரேஷன் நகர என்ஜினியராக நியமிக்கப்பட்டிருக்கும் தோழர் எம் மீரானுக்கு நேற்று மாலை இளம்பிறைச் சங்க மண்டபத்தில் உபசரிப்பு அளிக்கப்பட்டது கொண்டாட்டத்திற்கு உள்நாட்டிலாகா காரியதரிசி தோழர் ஓ. புல்லாரெட்டி தலைமைவகித்தார் காண்டாமிருகத்தைப்போல் சுரணையற்ற தோலும் கழுதையின் பொறுமையும் சாணக்கியனின் தந்திரமும் சில சமயங்களில் ஒரு அதிகாரிக்குத் தேவைப்படுவதாக தோழர் ரெட்டி கூறினர் நகர சபையினரோ பொது ஜனங்களோ குறை கூறினல் அதுகண்டு தோழர் மீரான் சஞ்சலமடையாமல் மனது உறுதியுடன் கடனாற்றவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

Edited and Published by B. Ranganadha Naidu, 36, Thiruvengada Mudali Street, Periamet, Madras. 3. Printed by J. A. SILVA at the
Jt. Editor; PIVIAR. "LIBERATOR" Press-2-11, Mount Ro